# நெஞ்சை உருக்கும்

# நீதிக் கதைகள்



கவிஞர் வெள்ளியங்காட்டான்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்


www.worldtamilacademy.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

நெஞ்சை உருக்கும்

# நீதிக் கதைகள்



கவிஞர் வெள்ளியங்காட்டான்

www.worldtamilacademy.com

# கவிஞர் வெள்ளியங்காட்டான்



என்,

தந்தையின் பரிசாக

அருமைத் தாய்க்கு

அர்ப்பணம்...

**Nenchai Urukkum Neethi Kathaigal** (Stories on Morality)

*Velliyamkaattaan * First Edition : Dec. 2005.
*(c): V.R. Nalini
• Published by : V.R. Nalini, 1/52, Arasa Mara Street,

Aavarampalayam, Coimbatore - 641 006, PHONE : 2561015

•Paper Size : Crown 1/8 • Pages : 104

* Printed at : Thilaga Offset, 169-A, 6th Street Extension,

Gandhipuram, Coimbatore - 641 012. Phone : 2523205

**நெஞ்சை உருக்கும் நீதிக்கதைகள் - கதைகள்**

• கவிஞர் வெள்ளியங்காட்டான் - முதற்பதிப்பு: டிசம்பர் 2005
உரிமை : வெ.இரா. நளினி
• வெளியீடு : வெ.இரா. நளினி, 1/52, அரசமர வீதி,

ஆவரம்பாளையம், கோயமுத்தூர் - 641006. ph:2561015

நூலின் அளவு : கிரௌன் 1/8 பக்கங்கள் : 104

• அச்சாக்கம் : திலகா ஆப்செட், 169-ஏ, 6வது வீதி தொடர்ச்சி,

காந்திபுரம், கோயமுத்தூர் - 641012. ph: 2523205

# மலரும் வாழ்வும்!

அது ஓர் அழகான மணம் பரப்பும் மலர்
ஒரு நாள் காலையில் மலர்ந்தது
கொஞ்ச நேரம் மகிழ்ந்தது, பிறகு
மெல்ல, மெல்ல வாடியது,
காற்று வீசியது,
மலர் உதிர்ந்தது.
வாழ்க்கை என்பதும் அம்மலர்
போன்றதே!
அம்மலர் தான் வாழும் காலம்
வரை தன்
நறுமணத்தை எங்கும் பரப்பியது.
காற்று மரணத்தைக் கொடுத்த போது
மகிழ்வோடு ஏற்றுக் கொண்டது!
இது தான் வாழ்க்கை.
இது தான் மரணம், பின்
அழுது புலம்புவது எதற்காக?

– **கன்னடக் கவிதை**

இத்தொகுப்பில் உள்ள கர்நாடகக் கதைச் சிற்பிகளின் பெயர்களை அறியாத போதும் நன்றிகள் அவர்களின் பணிக்காக!

– **மறைந்த கவிஞர் வெள்ளியங்காட்டான்**

“அழகான கதைகள் மலர்வதென்றால் அதற்கு வளம் மிகுந்த ஒரு வளர்ப்புப்பண்ணை வேண்டும். அப்பண்ணையில், உருவிலா மணமிலாப்பூக்கள் பல பூத்து, வாடி, மண்ணோடு மண்ணாக மக்கி எருவாகி இருக்க வேண்டும். இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. முன் பூத்து வாடிய மலர்களே இப்போதுள்ள கதைகளுக்கு உரமாகி விடுகின்றன. நம்முடைய சாரமற்ற கதைகளே இனிப் பூக்கும் வாடாத மலர்களுக்கு எருவாகிவிடுகின்றன”.

இவ்வமுத வாக்கியம் ஒரு அறிஞரின் சிந்தனை.

# வெளியீடுவோர் குறிப்பு

**க**ன்னடச் சான்றோர்கள் கூறக் கேட்டுக் கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்களால் தமிழில் எழுதி வைக்கப்பட்டவை இக்கதைகள்! இவற்றின் மூலநூல்கள் பற்றிய விபரம் தெரியவரவில்லை. விபரங்கள் கிடைத்தால் அடுத்த பதிப்பில் தவறாது வெளியிடுவோம். இக்கதைகளில் பொதிந்திருக்கும் உயர்ந்த கருத்துகள் மனித மனங்களில் பாய வேண்டும் என்ற அவாவினால் இவற்றை நூலாக வெளியிடுகிறோம்.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு

அன்புடன்

**வெளியீட்டாளர்**

# பதிப்புரையாக

அமரர் தத்துவக் கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்களின் 'பேத்தி' – என்றதும் இந்த உயிரோட்டமான உயர்ந்த உறவு உண்மையில் உள மகிழ்ச்சிக்கு உரிய உணர்வே.

ஏனெனில் - எனது வாழ்க்கையின் அடித் தளத்தை ஆழமாக அமைத்து அதன் 'அகல - நீள - ஆழ – அடர்த்தியின்' அர்த்தங்களை அவ்வப் போது அறிவுறுத்துகிறார் அவர்.

"அவரை" எனது தாத்தா என்று குறிப்பிடுவதை விடவும் "எனது ஆசான்" என்று அழைப்பதே அறிவுப்பூர்வமானது என அறிகிறேன். ஆனந்திக்கிறேன்.

"அவரது" திருப்பெயரால் அமரகவி வெள்ளியங்காட்டான் நினைவு அறக்கட்டளை [இலவச] நூலகத்தையும், ஆதரவற்ற குழந்தைகள் - பெண்கள் - முதியோர்கள் மற்றும் உடல் - மன- ஊனமுற்றோருக்கான இலவச காப்பகத்தையும் "ஆன்ம அமைதி" தியான-யோக-ஆன்மீக மையத்தையும், "பிரபஞ்ச அமைதி ஆசிரமம்" என்ற அறக்கட்டளை ஒன்றையும் நானும், எனது கணவரும் இணைந்து நிறுவி அன்னாரது நினைவுகளை எல்லாம் நிஜமாக்கி வருகிறோம்.

இன்னும், அவரது அற்புதப் படைப்புகள் அனைத்தையும் அச்சேற்றி அருமைப் புத்தகங்களாக்கி உலக மக்களுக்கு அர்ப்பணிக்கவே அதிகம் ஆவலுறுகிறோம்.

மேலும், "நெஞ்சை உருக்கும் நீதிக்கதைகள்" என்னும் இப்புத்தகத்தை நமது "பிரபஞ்ச அமைதி ஆசிரமம்" சார்பாக எனது தாத்தா கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்களின் நினைவாக, எனது உயிர்த்தாய் வெ.இரா.நளினி நாராயணசாமி அவர்கள் வழியாக வெளியிடுவதில் ஆத்ம ஆனந்தம் அடைகிறோம்.


என்றென்றும்

**N. சிவா சித்ரா M.Sc., M.Ed., M.Phil.,**

பிரபஞ்ச சேவா மையம்

நல்ல கவுண்டம்பாளையம், பதுவம்பள்ளி

கருமத்தம்பட்டி வழி, கோவை - 641 659

98422 80205, 98422 20285, 98422 20295

# கவிஞன் மகள் பேசுகிறேன்...

வாசக நேயர்களே! வாசியுங்கள்! வாசித்ததை நேசியுங்கள்! அசைபோடும் விலங்குகள் போல மீண்டும், மீண்டும்!

அதன் சத்தும், சாரமும் உள்ளே இறங்கட்டும். புத்தரின் அமைதி, செல்வத்தில் இல்லை, மாசு மறுவற்று மலர்ந்த மனத்தில் மட்டுமே!

நாம் அமைதியாக வாழவும் பிறரை வாழ வைக்கவும், குற்றமற்ற, சுயநலமற்ற மனம் வேண்டும்.

நீங்கள் புத்தராக வேண்டாம்; மனித நேயமிக்க மனிதராக ஆகுங்கள்!

இதன் சத்தும், சாரமும் இதயத்தில் நிறைந்து, விழிகளில் சுடர்ந்து நாவில் தேன் துளிகளாய்ச் சிந்தட்டும். வாழ்வின் இலட்சியங்களாய் மலர்ந்து மணம் பரப்பட்டும்.

கலாமின் கனவுகள் நனவாகட்டும். பொருளாதாரத்தில் மட்டுமல்ல, அகிம்சையில், கருணையில், தியாகத்தில் மிஞ்சியது ‘பாரதம்’ எனப் போற்றிப் பேசட்டும்.

உங்கள் அனைவரின் தாயாகி வாழ்த்தும்,

**வெ.இரா.நளினி**

# நன்றி...

போராடிப் போராடித் தோற்றுப் போன தந்தை!

போராடித் தோற்றுவிடுவேன் என

மரணத்தை அழைக்கும் வயதில்,

“மனித நேயம் மிச்சமின்றி” என,

இதயம் உருகி,

இருகை நீட்டி,

இருநூல்கள் வெளிவர உதவிய

**புவியரசு** என்னும் கவிஞர் பெருந்தகை....

மாபெரும் கவிஞன் மக்களுக்காகச்

சூடிக்கொடுத்த சுடர்க் கதை மாலை

இது என்று கனிந்து

நெகிழ்ந்து இனிய நன்மொழி கூறி,

அழிந்து விடுமோ என நான்

அஞ்சி நினைத்ததை,

முழு முயற்சியோடு

அழகாக்கி, உயிர்கொடுத்து

நீங்கள் உட்கொள்ளக் கொடுத்த சகோதரர்,

கவிஞரைக் கொண்டாடும் கவிஞர்,

ஸ்ரீ சே.ப. நரசிம்மலு நாயுடு நினைவு

உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்

**இரணியன்** என்னும் அன்பு நெஞ்சினர்...

www.worldtamilacademy.com

என் தந்தையின் நூல்கள்"

"கவியகம்", "நீதிக் கதைகள்"

ஆகியவற்றை அழகுற அச்சிட்டுக் கொடுத்த

நந்தினி அச்சகம் தோழர் **வேனில்......**

மற்றும் அச்சக நண்பர்கள்

அனைவருக்கும்

என் தந்தையின் ஆசியும் என்றும் என் நன்றியும்.

- **வெ.இரா.நளினி**

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | கருணை | 1 |
| 2 | தியாகம் | 4 |
| 3 | ஈகை | 8 |
| 4 | மதிப்பு | 11 |
| 5 | பொறுப்பு | 15 |
| 6 | மனிதன் | 18 |
| 7 | மரணம் | 22 |
| 8 | இரத்தினக்கல் | 25 |
| 9 | இருளும் ஒளியும் | 28 |
| 10 | கேள்வியும் பதிலும் | 33 |
| 11 | ஜூடஸின் முகம் | 39 |
| 12 | அரசனும் அறிஞனும் | 45 |
| 13 | புண்ணிய பூமி | 51 |


www.worldtamilacademy.com

# மனிதத்தை மாண்புறச் செய்தல்

அறிவுப் புலத்தில் எத்தனையோ ஒளிச்சுடர்கள் எழுந்து ஒளிவீசியுள்ளதை வரலாற்றில் காண்கிறோம். ஆனால் அச்சுடர்கள் வீசிய ஒளியை மனித சமூகம் பயன்படுத்திக் கொண்டதா என்பதுதான் கவலையோடு நம் நெஞ்சில் எழும் கேள்வி.

கடந்த நூற்றாண்டில் இக்கொங்கு மண்ணில், தன்மானத்தோடும் தமிழ் நேயத்தோடும் வாழ்வியல் செம்மை யோடும் வாழ்ந்து, அரிய சிந்தனைகளைப் பாடல்களாகவும் உரைநடையாகவும் எழுதிக் குவித்த ஒரு மாபெரும் தமிழ் மகன் கவிஞர் வெள்ளியங்காட்டான், எத்துணை தமிழரால் அறியப் பட்டிருந்தார் என்பதுதான் நம்மை வருத்தமுறச் செய்யும் வினாவாகும்.

ஒரு தொழிலாளியாக அவர் வாழ்ந்தார். படிப்பாளியாகவும் சிந்தனையாளராகவும் படைப்பாளியாகவும் அவர் திகழ்ந்தார். "அறம் செயும் வகை" அறிந்திருந்த அவருக்குப் 'பொருள் செயல் வகை' தான் புலப்படாததாய் இருந்தது. பொருளை நேசித்த மக்களுக்கு, அருள் நேயராகவும் அறநேயராகவும் அறிவு நேயராகவும் வாழ்ந்த ஒருவரை அடையாளங்காண இயலவில்லை!

இருள் விலகுகிறது இன்று! சிதலை தின்னப்பட்ட ஆலமரத்தை அதன் விழுது தாங்கி நிமிரச் செய்வது போல, தந்தையின் அறிவுச் செல்வத்தைத் தாம் ஏந்தி வந்து தந்தையின் புகழைத் தமிழ் வானில் நிமிரச் செய்கிறார் அவர் திருமகள்! நளினி அம்மையார் எனும் நற்றாய்! மகள் தந்தைக்கு ஆற்றும் பணியைக் கண்ணுறும் போது, 'இவர்தந்தை என் நோற்றாரோ?' என்று எண்ண வேண்டி இருக்கிறது! மக்களைப் பயந்த தாய் தந்தையரைத் தான் உலகம் அறிந்துள்ளது.

ஆனால் தந்தையைப் பயந்த மகளை இப்போதுதான் உலகம் அடையாளம் காண்கிறது.

அம்மையார் அவர்களின் அரு முயற்சியால், கவிஞரின் கவிதைத் தொகுப்புகள் இரண்டு வெளியாகின! இப்போது இளம் உள்ளங்களைப் பண்படுத்தும் ஓர் அருமையான சிறுகதைத் தொகுப்பு நம் கைகளில் தவழ்கிறது. கவிஞர் தமிழை ஆழக்கற்றதுடன் கன்னடமும் கற்றுத் தேர்ந்தவர். கன்னட மொழியில் வழங்கும் நல்ல கதைகளை, நல்ல வரலாற்றுச் செய்திகளை அன்னைத் தமிழில் அழகுறப் படைத்திருக்கிறார்.

நெஞ்சை நெகிழ்விக்கும் மேலான நீதிகள் அடங்கிய கதைகள் இவை! மனித மனங்களில் நற்பண்புகளைச் செழிக்கச் செய்பவை!

“மனிதரிலும் மேலான தாய்மைப் பண்பு வாய்ந்த கொரில்லாக் குரங்கு; மக்கள் உயிர்கள் காக்கப்படுவதற்காகத் தம் உயிரை ஈந்த மகா நாமர்; சொற்பிறழாது ஏழைக்குப் பெருந்தொகை நல்கிய மோதிலால் நேரு; சிறுமி ஒருத்தியின் சொல்லுக்கும் உயர்ந்த மதிப்பளித்த குடியரசுத் தலைவர் ஆப்ரஹாம் லிங்கன்; கடைநிலைப் பணியாளரின் கடமையைத் தான் ஏற்றுச் செய்த நகர மேயர்; பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைந்த புத்த பெருமான்; உணவு அரைக்கும் கல் இரத்தினக் கல்லிலும் உயர்ந்தது என்பதை அசோகனுக்கு உணர்த்திய புத்தத் துறவி; மனித உயிர்களின் மதிப்பு அறியாத மன்னனுக்கு மனிதம் இது என்பதை உணர்த்திய கவிஞர் அகமது; பொய்யன் கோய பெல்சையும் வாயடக்கிய வாய்ச் சொற்கள்; பால்வடியும் மழலை உள்ளமே தடம் மாறும் போது கொலையிற் கொடிய கெடு மனமாய் ஆவதைக் காட்டும் ஓவியர்; மாற்றாரை மாய்த்துச் சூடும் வாகை நிலையற்றதே என்பதை உணரச் செய்த ஞாயவான் சோலோன்;

மண்ணையும் இயற்கையையும் மண்ணின் மைந்தரையும் அழித்துப் படைத்தது நாகரிகம் ஆகாது என்பதை எடுத்துரைக்கும் அமெரிக்கப் பழங்குடி" இவர்கள் யாவரும் நம் மனத்தைவிட்டு நீங்க மறுப்பதே இந்த நூலின் பெருமைக்குக் கூறும் கட்டியமாகும்.

மனிதத்தை மாண்புறச் செய்யும் இந்நூலை அழகாக அச்சிட்டளித்த நந்தினி அச்சகம் திரு. வேனில் அவர்களும் அச்சகப் பணியாளர்களும் நம் பாராட்டுக்குரியவர்கள். இந்நூலை அரிதின் முயன்று வெளியிடும் கவிஞரின் பேத்தி சிவா சித்ரா அவர்கள் நம் போற்றுதலுக்குரியவர்.

**- இரணியன்**

# 1. கருணை

இவ்வியக்கத்தக்க சம்பவம், 1919 - செப்டம்பர் 12 ஆம் நாள் ‘உகாண்டா’ நாட்டில் ஒரு சிறிய கிராமத்தில் நடந்தது. ‘மசாயி’ என்ற ஆதிவாசிகள் அடர்ந்த காடுகளில் சிறு சிறுநிலப் பகுதியைத் தமக்குச் சொந்தமாக்கி விவசாயத் தொழில் செய்து வாழ்ந்து வந்தனர்.

அங்கு புதிதாக மணம் புரிந்த தம்பதிகள் மகிழ்ச்சியாகத் தங்கள் வாழ்வைத் தொடங்கினர். ஓரிரு வருடங்களில் தாய்மை அடைந்த அப்பெண், குழந்தை பிறந்த சில நாட்களில் நோய்வாய்ப்பட்டு இறந்து போய் விட்டாள்.

இந்நிலையில் நிலத்தில் விளையும் கிழங்கு, காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை ‘கொரில்லா’ என்ற ஒருவகைக் குரங்குகள் நாசப்படுத்தித் தொல்லை கொடுத்தன. தன்னந்தனியனான அவ்வாலிபன் தாயற்ற தன் அருமைக் குழந்தையைப் பாதுகாக்கவும், உழைத்துப் பயிரிட்ட உணவைக் கொரில்லாக்களிடமிருந்து காக்கவும் இடைவிடாமல் போராடித் துன்புற வேண்டியிருந்தது.

ஒருநாள் குழந்தை தூங்கும் நேரம். கூப்பிடு தூரத்தில் நிலத்தைப் பண்படுத்தும் வேலையைச் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது குழந்தையின் அழுகுரல் கேட்டதும் வீட்டை நோக்கி விரைந்தான். ஆனால், அவன் சற்றுத் தொலைவில் வரும்போதே, பெண் கொரில்லா ஒன்று தன் குட்டிகளோடு குடிசைக்குள் நுழைந்து கொண்டிருந்ததைப் பார்த்து ஸ்தம்பித்து நின்று விட்டான். தன் குழந்தையின் கதி என்னவாகுமோ என அவன் மனம் பதறிற்று.



www.worldtamilacademy.com

தன் தோளிலிருந்த வில்லை எடுத்து நாண் ஏற்றியவாறு பீதியோடு அடிமேல் அடிவைத்து குடிசைக்கு அருகில் வந்தபோது குழந்தையின் அழுகையும் நின்றிருந்தது.



அப்போது, குடிசையின் உள்ளே அவன் கண்ட காட்சி, அவனை மெய்சிலிர்க்க வைத்தது. என்ன ஆச்சர்யம்! தாய் கொரில்லா அவன் குழந்தையை மார்போடு அணைத்துப் பாலூட்டிக் கொண்டிருந்தது. குட்டிகள் தொட்டிலைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தன. இந்த அற்புதமான நம்ப முடியாத காட்சி அவனைச் சிலையாக்கியது.

பாலூட்டி முடித்த கொரில்லா குழந்தையை மீண்டும் முன்பிருந்தது போல் தொட்டிலிலிட்டுத் தன் குட்டிகளோடு வெளியேறியது. படபடக்கும் உள்ளத்தோடு குழந்தையைத் தூக்கி பால் வடியும் இதழ்களில் கண்ணீரோடு முத்தமிட்டான்.

அன்றுமட்டுமல்ல குழந்தை அழும் ஒவ்வொரு நாளும் அவன் இல்லாதபோது வந்து பாலூட்டிச் சென்றது. சில மாதங்களுக்குப் பிறகு மெல்ல மெல்ல அதன் வருகை நின்றுவிட்டது.

மனிதனாய்ப் பிறந்து விலங்காய் வாழும் உலகில், விலங்காய்ப் பிறந்து மனிதத் தன்மை என்னும் கருணையைக் காட்டிய கொரில்லாவை நாம் நம் வாழ்வில் மறக்க முடியுமா?

# 2. தியாகம்

சாது மகா நாமர் என்பவர் கபிலவஸ்து என்ற ஊரில் பிறந்தவர். பகவான் மகாவீரரைக் குருவாகக் கொண்டவர். தூய உள்ளமும் நல்லொழுக்கமும் பிறவியிலேயே அவருக்கு இயல்பாக அமைந்து இருந்தன.

பகவான் மகாவீரரின் சீடராகப் பணிபுரிந்த போது அவர் உபதேசித்த ஒரு வாக்கியம் – "நாஸ்தி தியாக சமண் சுகம்" என்பது. அதன் பொருள் தியாகத்தை மிஞ்சிய சுகம் இல்லை என்பது தான். அவ்வாக்கியம் அவரின் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது.

ஒரு காலத்தில் அவரிடம் கல்வி கற்ற மாணவனான விடூபன் என்பவன் – சீராவஸ்தி என்ற நகருக்கு அரசனானான். பிறகு அவன் பெரும் படையோடு கபிலவஸ்துவை முற்றுகையிட்டுப் புரிந்த போரில் வெற்றியும் பெற்றான்.

இரக்கம் என்பதே அறியாத அவன் அப்பாவி மக்களையெல்லாம் கொன்று குவிக்கத் தொடங்கினான்.

அப்போது அங்கு வருகை தந்த மகா நாமர் இதைக் கேள்விப்பட்டுத் தன்னிடம் கல்வி கற்ற ஒரு மாணவன் இத்தகைய கொடூர குணமுடையவனாக இருக்கிறானே என்று எண்ணிக் கலங்கினார்.

இச்செயலைத் தடுத்தே ஆக வேண்டும் என்ற உறுதியோடு அவனைக் காணச் சென்றார். தான் ஓர் அரசன் என்ற கர்வம் விடூபனுக்கு இருந்த போதிலும் தனக்குக் குருவாக இருந்ததால் அவரை வரவேற்க வேண்டியதாயிற்று.


www.worldtamilacademy.com

அவனுக்கு வணக்கம் கூறிய மகாநாமர் “அரசே நீ என்னிடம் கல்வி கற்ற போது குருதட்சணை கொடுக்க முன் வந்தாய். ஆனால் நான் அதை வேண்டும் போது பெற்றுக் கொள்வதாகக் கூறியிருந்தேன். இன்று அதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவே வந்திருக்கிறேன்” என்றார். சற்றுத் தயங்கிய விடூபன் “சரி கேளுங்கள்” எனத் தலையசைத்தான். “இங்கு அப்பாவி மக்கள் கொல்லப்படுவது உடனே நிறுத்தப்பட வேண்டும் என்பதே நான் உன்னிடம் கேட்கும் குருதட்சணை” என்றார் மகாநாமர்.



குள்ளநரியைப் போல் சில கணங்கள் யோசித்த விடூபன் “குருதேவா, இந்த தட்சணையை ஒரு நிபந்தனையோடு தங்களுக்குத் தர விரும்புகிறேன். அரசன் என்ற முறையில் என் நாட்டையும் மக்களையும் நான் காப்பாற்றியாக வேண்டும். தோல்வியுற்ற இந்நாட்டு மக்கள் நாளை படை வீரர்களாய் உருவாகலாம். என் நாட்டின் மீது போரும் தொடுக்கலாம் அல்லவா? ஆனால் என் குரு என்பதால் தங்களின் தட்சணையையும் நான் மறுக்க விரும்பவில்லை. ஆகவே நீங்கள் ஒரு நீர் நிறைந்த குளத்தில் மூழ்கி மேலே வரும் கால அளவுவரை நான் அவர்களைக் கொல்லும் செயலை நிறுத்தி வைக்கிறேன் இதற்குச் சம்மதமா?” என்று கேட்டான். கொடூரமான இந்த நிபந்தனைக்குச் சற்றும் தயங்காமல் சரி என்று தலையசைத்த மகாநாமர் “அப்படியே ஆகட்டும்” என்றார். கொலைத் தொழில் நிறுத்தப்பட்டது. மகாநாமர் நகர்ப்புறத்திலுள்ள ஓர் ஆழமான குளத்தில் அரசன் கண் முன்பே குதித்து அமிழ்ந்து போனார்.

இதையறிந்த மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதையும் மறந்து பதை பதைத்து நீரில் மூழ்கிய அந்த ஞானியைக் காணக் கூடினர். அரசனும், ஏனையோரும் அவர் மேலே வருவதை எதிர்பார்த்துக் காத்து இருந்தனர். ஆனால் நேரம் சென்று கொண்டு இருந்ததே தவிர மகாநாமர் மேலே வரக் காணோம். நீண்ட நேரம் காத்திருந்த அரசன் சலிப்பும் சினமும் அடைந்து தன் படைவீரர்களைக் குளத்தில் இறங்கித் தேடக் கட்டளையிட்டான். தன் இடுப்பில் கல்லைக் கட்டிக் கொண்டு நீரில் மூழ்கி இறந்துவிட்ட மகாநாமரின் உடலை வீரர்கள் மேலே கொண்டு வந்தனர். அதைக்கண்ட அரசன் திடுக்கிட்டான்.


www.worldtamilacademy.com

மக்களைக் காக்கும் பொருட்டுத் தன் இன்னுயிரைத் துச்சமென ஈந்த அந்த குருநாதரின் புன்னகை புரியும் ஒளி நிறைந்த முகத்தை உற்று நோக்கினான். மக்கள் கூக்குரலிட்டனர்; கதறித் துடித்தனர்.

"குருவையே கொன்று விட்ட மகாபாவி" எனச் சாடினர். விடூபன் தலை குனிந்தவாறு தன் கொடிய செயலுக்கு வருந்தி அவ்விடம் விட்டு அகன்றான்.

தியாகத்தை மிஞ்சிய சுகம் எது எனச் செயலில் செய்து காட்டிய மகாநாமரை நாம் நினைவில் கொண்டு அவ்வழி நடப்போம்.

# 3. ஈகை

முன்னாள் பாரதப் பிரதமர் நேருவின் தந்தையான மோதிலால் நேருவின் வாழ்வில் நடந்த சிறு சம்பவம் தான் இது. மோதிலால் நேரு தலைசிறந்த சட்ட நிபுணர். வாதாடுவதில் மிகவும் வல்லவர். புத்திக் கூர்மை மிக்கவரும் கூட.

ஒருநாள் காலை, அலுவலகத்திற்குச் செல்ல வெளியே வந்தபோது அவரைப் பார்க்கக் காத்திருந்த ஓர் ஏழை மனிதன் அவரை வணங்கினான். மோதிலால் நேரு "யார் நீங்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு" என அன்புடன் வினவினார்.

"ஐயா, நானோர் ஏழை பிராமணன். புரோகிதம் செய்வது தான் என் தொழில். அதில் வரும் சொற்ப வருமானம், என் பெண்ணும் நானும் அரைவயிறு உண்ணத்தான் போதுமானதாய் உள்ளது. தாயற்ற என் ஒரே பெண்ணுக்குத் திருமணம் நிச்சயித்துவிட்டேன். ஆனால் திருமணம் நடத்தப் பலரிடம் கடன் கேட்டும் பயனில்லை. ஓரிருவர் தங்களின் பெயரைக் கூறித் தாங்கள் நிச்சயம் உதவுவீர்கள் என்றனர். ஆதலால் நம்பிக்கையுடன் இங்கே வந்தேன். கருணையோடு என் மகளின் திருமணம் நடக்க உதவ வேண்டும்" என்றார்.

"அப்படியே, ஆகட்டும்! உங்கள் பெண்ணின் திருமணத்திற்குச் செலவுத் தொகை எவ்வளவு ஆகும் எனக் கூறுங்கள்!" என்றார் மோதிலால்.

ஓரிரு நிமிடங்கள் யோசித்த புரோகிதர் "சுமார் ஒரு முந்நூறு ரூபாய் தேவைப்படலாம்" என்றார்.

இதைக்கேட்ட மோதிலால் தமது உதவியாளரிடம், “இன்றைக்கு நம் கட்சிக்காரரிடமிருந்து எவ்வளவு பணம் வருகிறதோ அதை இவருக்குக் கொடுத்து விடுங்கள்” என்று கூறி விட்டுப் புரோகிதரிடம் “ஐயா, நீங்கள் மாலையில் வந்து பணத்தை பெற்றுக் கொள்ளுங்கள்!” என்றதும், இது உண்மையா? பொய்யா? என விக்கித்து நின்றார் புரோகிதர்.



ஒவ்வொரு நாளும் வழக்குகளைப் பொறுத்துக் கட்சிக்காரரிடமிருந்து பணம் வருவது வழக்கம். மிகச் சிறந்த சட்ட நிபுணர் என்பதால் பலரும் அவரையே நாடினர். அன்றையதினம் அவருக்கு வந்த மொத்த வருமானம் ஆயிரத்து முந்நூறு ரூபாயாகும். உதவியாளர் அவரை அணுகி 'புரோகிதருக்கு முந்நூறு ரூபாய் கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தை வங்கியில் கட்டி விடட்டுமா?" எனக் கேட்டார்.

"வேண்டாம் - இன்றைக்கு வரும் பணம் முழுவதும் அவருக்கே கொடுப்பதாகக் கூறிவிட்டேன். ஆகவே, மொத்தப் பணத்தையும் அவரிடமே கொடுத்து விடுங்கள். அவரது பெண்ணின் அதிர்ஷ்டமே இன்று பணம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. ஆகவே அவளது திருமணம் சிறப்பாக நடக்கட்டும்" என்றார் மோதிலால் நேரு. கொடுப்பதற்கு என்று இப்படியொரு மனம் மட்டும் இருந்தால் புரோகிதர் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்!

# 4. மதிப்பு

அமெரிக்காவில் நடக்கும் ஜனாதிபதிக்கான தேர்தலில் ஆப்ரஹாம் லிங்கன் என்பவரும் போட்டியிடுகின்றார். அவரது உருவப்படத்தை எல்லா நாளிதழ்களும் பிரசுரித்திருக்க எதேச்சையாக, பத்து வயது மதிக்கப்பட்ட சிறுமி ஒருத்தியும் அதைப் பார்க்க நேர்ந்தது.

அழகு என்பது சிறிதுமற்று நீண்ட முகமும் குழிவிழுந்த கண்களும், ஒட்டிய கன்னங்களுமாக இருந்த அந்தப் படத்தைப் பார்த்த அச்சிறுமி, தன் கையிலிருந்த பென்சிலால் அவரின் படத்துக்குத் தாடியை வரையத் தொடங்கினாள். அப்பொழுது அப்படம் அழகாக இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அதை அவருக்குத் தெரிவிக்க விரும்பி உடனே ஒரு கடிதம் எழுதினாள்.

“உயர்திரு. ஆப்ரஹாம் லிங்கன் அவர்களுக்கு வணக்கம்.

ஐயா, என் வயது பத்து. என் பெயர் கிரேஸ் பேடல். தாங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை நாளிதழ் மூலமாக அறிந்தேன். தங்களிடம் எனது சிறிய வேண்டுகோள் ஒன்று. நீங்கள் தாடி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே! அப்படி நீங்கள் தாடி வைத்துக் கொண்டால் என் மீது மிக்க அன்பு கொண்ட என் குடும்பத்தினர் அனைவரையும் தங்களுக்கே வாக்களிக்கும் படி கூறுவேன். நீங்களும் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்”.

இக்கடிதம், ஆப்ரஹாம்லிங்கன் செயலர்களிடம் சர்ச்சையை எழுப்பியது. மிக முக்கியமான கடிதங்கள் மட்டுமே ஆப்ரஹாம் பார்வைக்குக் கொடுக்கப்படும்.

ஆதலால் இந்தக் கடிதம் அர்த்தமற்றதும் தேவையற்றதும் ஆகும் என்று ஒருவரும், அதை லிங்கனே தீர்மானிக்கட்டும் என்று ஒருவரும் வாதிட்டனர். முதலில் அது லிங்கனின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதைப் படித்த அவர் உடனே பதில் அனுப்பினார்.




"அன்புமிக்க என் சின்னஞ்சிறு சிநேகிதிக்கு நல்வாழ்த்துக்கள்... நான் தாடிவைக்க வேண்டும் என்ற உன் விருப்பம் விசித்திரமாக இருந்த போதிலும், உன் விருப்பத்தை நிறைவேற்ற முயல்கிறேன்.

இப்படிக்கு

ஆப்ரஹாம் லிங்கன்"



www.worldtamilacademy.com

பிறகு நடந்த தேர்தலில் அதிக வாக்குகளோடு லிங்கன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை வெள்ளை மாளிகைக்கு அழைத்துச் செல்ல இரயில் வண்டி ஏற்பாடு செய்யப்பட்டது. அது கிரேஸ் பேடலின் ஊரான வெஸ்ட்பீல்டின் வழியாகத்தான் செல்கிறது என்பதை அவர் அத்தனை அலுவல்களுக்கு மத்தியில் தெரிந்து கொண்டார். அங்கு அவரைப் பார்ப்பதற்காக வந்த கூட்டம் வெள்ளம் போல் அலைபாய்ந்தது. ஆனால் இரயில் நிற்க அங்கு அனுமதிக்கப்பட்டது சொற்ப நிமிடங்களே. கிரேஸ் ஜனாதிபதியான தன் நண்பரைக் காண ஆவலோடும் ஆசையோடும் தந்தையின் துணையோடு வந்திருந்தாள். அவள் கண்கள் அவரைத் தேடின. கண்ணுக் கெட்டிய தூரம் வரை தெரியும் மனிதத் தலைகள் அவள் அவரைக் காண முடியாது என்பதை உணர்த்தின. அவள் கண்களில் நீர் நிறைந்தது. திடீரென ஒரு குரல் ஒலித்தது “என தருமை மக்களே! உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் சொற்பொழிவு நடத்த எனக்கு நேரமில்லை. உங்களிடம் ஒரு சிறு வேண்டுகோள். இவ்வூரைச் சேர்ந்த கிரேஸ் பேடல் என்ற சிறுமி என்னைக் காண வந்திருப்பாள். என் வெற்றிக்கு உதவிய அச்சிறுமியை பார்க்க எனக்கு உதவுங்கள்" என்றார் லிங்கன்.

ஏமாற்றத்தோடு வீடு திரும்ப எண்ணிய கிரேஸ், இதைக் கேட்டதும் பெருமகிழ்ச்சியோடு “நான் இங்கே இருக்கிறேன்” எனக் கூவினாள். மக்கள் அவசரமாக அவளுக்கு வழிவிட்டனர். லிங்கன் அவளை அன்போடு எடுத்து முத்தமிட்டார். அவளின் கைகள் அவரின் தாடியை வாஞ்சையுடன் தடவின. “உன் விருப்பத்தை நிறைவேற்றி விட்டேன் என் சின்னஞ்சிறு சிநேகிதியே. உனக்கு மிக்க மகிழ்ச்சிதானே!



www.worldtamilacademy.com

இன்னொரு முறை நான் இங்கு வந்து நிச்சயமாக உன்னைச் சந்திப்பேன்" எனக்கூறி கிரேஸைக் கீழே விட்டபோது, பேச்சிழந்து கண்ணீரோடு கையசைத்து விடை கொடுத்தாள்.

இதைக் கண்டு மக்கள் வியந்தார்கள். ஜனாதிபதியான ஒருவர் ஒரு சிறு பெண்ணுக்குக் கொடுத்த மதிப்பு அவர்களின் மனத்தில் லிங்கனை மேலும் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு சென்றது.



www.worldtamilacademy.com

# 5. பொறுப்பு

'கனடா' - என்ற நாட்டில் எட்மௌண்டன் என்ற நகரத்தில் மேயராக ஐவேர்டெண்ட் என்பவர் இருந்தார். அவரது அலுவலகம் பல மாடிக் கட்டடத்தின் இரண்டாம் அடுக்கில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு நாள் அவர் அலுவலகம் செல்ல அங்கிருந்த லிப்டின் உள்ளே நுழைந்தார். அவரைப் பின்பற்றி வந்த ஒரு பெண், உள்ளே இருப்பவர் யார்? எவர்? என அறியாமல் ஏதோ சிந்தனையோடு "ஏழாவது மாடிக்கு" என்றாள் அதிகார தோரணையோடு.

மேயர் பதிலேதும் கூறாமல் ஏழாவது மாடிக்கு லிப்டை இயக்கினார். அங்கு அந்தப் பெண்ணை விட்டு விட்டுத் திரும்புகையில் அங்கிருந்த சிலர் லிப்டின் உள்ளே வந்து "முதல் மாடிக்கு" என்றனர். முதல் மாடியில் அவர்களை இறக்கிவிட்டு இரண்டாவது மாடியிலிருக்கும் தன் அலுவலகம் வந்து வேலையைத் தொடங்கினார்.

இரண்டு மணி நேரம் சென்றிருக்கும். டெலிபோன் மணி ஒலிக்க எதிர்முனையிலிருந்து ஒரு பெண்ணின் குரல் "ஹலோ மேயர் அவர்களே நான் ஏழாவது மாடியில் அரை மணி நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன். 'லிப்ட் பாய்' லிப்டை மேலே கொண்டு வரவில்லை. அவனைக் கொஞ்சம் எச்சரிக்கை செய்யுங்கள்" என்றது.

மேயர், "அப்படியே ஆகட்டும் அம்மணி" என்றவர், தம் அலுவல்களை அப்படியே நிறுத்திவிட்டு வெளிச்சென்று லிப்டை ஏழாவது மாடிக்கு இயக்கினார்.


www.worldtamilacademy.com

மாடியில் காத்திருந்த பெண்மணி காலையில் லிப்டில் வந்த பெண்மணியே! மேயரைக் கண்டதும் அவள் கோபத்துடன் கூச்சலிட்டாள். “என்ன வேலை பார்க்கிறாய் நீ? பொறுப்பற்ற உன் போன்றவர்களால் எங்கள் நேரம் எல்லாம்



வீணாகிறது. மேயரிடம் சொல்லவில்லை யானால், நீ இன்னும் கூட வந்திருக்க மாட்டாயல்லவா?" எனப் பொரிந்து கொண்டிருக்கும் போதே லிப்ட் முதல் மாடியை எட்டியது. வெளியே நின்ற ஓர் உயர் அதிகாரி 'லிப்டை' திறந்து மேயரைப் பார்த்து "ஹலோ" மேயர் அவர்களே! எப்படியிருக்கிறீர்கள்?" - என்றவாறு கைகுலுக்கினார். அவருக்குப் பின்னால் நின்ற அப்பெண் இதைப் பார்த்துத் திடுக்கிட்டாள். இவ்வளவு நேரம் தான் வசைபாடியது நகர மேயரைத்தான் என்பதறிந்து வெட்கத்தாலும் அவமானத்தாலும் கூனிக் குறுகிச் செய்வதறியாது நின்றாள்.

மேயர், அப்பெண்ணைப் பார்த்து மென்மையாக "அம்மா உங்களுக்கு ஏற்பட்ட கால தாமதத்திற்கு மன்னிக்கவும். 'லிப்ட் பாய்' - வழியில் ஒரு விபத்தில் சிக்கிக் கொண்டான். அவனுக்கு உதவ உடனிருந்த அலுவலர்களும் சென்று விட்டனர். ஆதலால்தான் உடனே மாற்று ஏற்பாடு செய்ய இயலவில்லை. மீண்டும் இவ்வாறு தவறு ஏற்படாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம்!" எனக் கூறினார்.

அப்பெண்மணி கண்ணீரோடு வணங்கியவாறு "இப்படிப்பட்ட மனிதர்களால் தான் உலகம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றைய உமது செயல்பற்றிக் கூற வார்த்தைகள் ஏதுமில்லை. தங்களிடம் மன்னிப்புக்கேட்கும் அருகதையும் எனக்கில்லை" எனக்கூறி வருந்தியபடி செல்லும் அப்பெண்ணை அன்பு ததும்பப் பார்த்தவாறு நின்றார் மேயர்.


www.worldtamilacademy.com

# 6. மனிதன்

தேவர்களின் சபை கூடியிருந்தது. எப்பொழுதும் மகிழ்வோடு வீற்றிருக்கும் சபைத் தலைவன் தேவேந்திரன் இன்று ஆழ்ந்த சிந்தனையுடனும் கவலையுடனும் காணப்பட்டான்.

தலைவனுக்கு என்னவாயிற்று? தங்களுக்குத் தெரிந்து இன்று எந்தத் துர்ச்சம்பவமும் நிகழவில்லையே? அப்படியிருக்க இவன் கவலை எதைப் பற்றியதாக இருக்கும்? என்ற கேள்வி அங்கு கூடியிருந்தோர் அனைவரின் மனத்திலும் எழ, ஒருவர் எழுந்து, “தேவேந்திரா! படைப்புத்தொழிலை மிகச் சிறப்பாகச் செய்யும் உனக்கு இப்படிக் கவலைப்படும்படி என்ன நேர்ந்தது? அப்படி ஏதேனும் இருந்தால் நாங்கள் உனக்கு உதவலாமே!” எனக் கேட்டார்.

தேவேந்திரன் சபையினரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து, “அது அவ்வளவு சுலபமான விசயம் அல்ல! நான் இரவு முழுவதும் தூக்கமின்றி யோசித்து விட்டேன். ஆனால் விடை என்னவோ கிடைப்பதாக இல்லை!” என்றான். “அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும், நாங்களும் உன்னோடு உன் கவலையைப் பகிர்ந்து கொள்கிறோம்!” என்றனர்.

“மனிதனை நம்போல் தேவர்களாக்கும் அரும்பெரும் இரகசியத்தை அவன் அறியாமல் புதைத்து வைக்க வேண்டும். ஆனால், அதை எங்கே? எப்படி? புதைப்பது என்பது தான் இப்போதைய குழப்பம்!” என்றான் தேவேந்திரன்.

“அட இவ்வளவு தானா! இதற்குப்போய் இப்படிக் கவலைப்படலாமா? இமயமலை என்ற ஒன்று எதற்காக இருக்கிறது?

அதன் உச்சி மீது இந்த இரகசியத்தை புதைத்து விட்டால் பிரச்சனை முடிந்தது!” இந்திரன் இதைச் சொன்னவரைக் கேலியாகப் பார்த்து “ஐயா, நீர் எந்த உலகில் இருக்கிறீர்? மனிதன் சந்திர மண்டலத்தின் மீது சவாரி செய்கிறான். அவனுக்கு இமயமலையெல்லாம் ஒரு பொருட்டா? உருப்படியாக ஏதாவது சொல்லுங்கள்”, என்றான் சலிப்பாக. மற்றொருவர் எழுந்து “ஏழு கடல்களுக்கு அடியில் அதைப் புதைக்கலாமே! அங்கே மனிதன் எதற்காக, எப்படி? செல்வான்” என்றார்.

இந்திரனுக்கு இப்போது கொஞ்சம் கோபம் வந்தது. “மனிதன் கடலுக்கு அடியில் இருக்கும் தரையையே புகைப்படம் எடுக்கிறான். அவன் கண்களுக்கு ஏதாவது தப்பித் தவறிப் போனாலும், புகைப்படம் அதை தெளிவாகக் காட்டிக் கொடுத்து விடும் ஐயா!” என்றார்.

இன்னும் ஒருவர் எழுந்தார். “நான் இப்போது சரியாகச் சொல்கிறேன். விலங்குகள் - அதாவது கொடிய விலங்குகள் வாழும் குகையில் அதை மறைத்து வைக்கலாம். உயிருக்குப் பயந்து மனிதன் அங்கே வந்து தேடமாட்டான்” என்றார்.

தேவேந்திரனின் கோபம் எல்லையைக் கடந்தது. “இது என்ன தேவர்களின் சபையா? இல்லை? முட்டாள்களின் கூட்டமா? நீங்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? இந்த மனிதன் கொடிய மிருகங்களை எல்லாம் சர்க்கஸில் நடனமாட வைத்துக் கொண்டிருக்கிறான். நீங்கள் என்னவென்றால் அவனுக்கு உயிர் என்றும், பயம் என்றும் அளந்து கொண்டிருக்கிறீர்கள்!” எனப் பொரிந்து தள்ளினான்.

சபையோர் ‘கப்-சிப்’ என மௌனமாயினர்.



தேவேந்திரன் கவலை நியாயமானது தான் எனவும் உணர்ந்தனர். பிறகு ஒரு பண்டிதன் எழுந்து, “தேவேந்திரா, இந்த மனிதனைப் பற்றி நீயே அறியாத இரகசியம் ஒன்றுள்ளது. அவன் எப்போதும் வெளியே உள்ள பொருள்களை மட்டுமே பார்ப்பவன், சிந்திப்பவன், செயல்படுபவன். என்றுமே தனக்குள்ளே என்ன இருக்கிறது என்பதை அவன் பார்க்கவும் மாட்டான், தேடவும் மாட்டான். ஆதலால், நீ எந்த இரகசியத்தை வேண்டுமானாலும் அவனுக்குள் புதைத்து வை, அவன் எக்காலத்திலும் அதைக் கண்டுகொள்ள மாட்டான்” என்றான்.

நிலைகொள்ளாத மகிழ்ச்சியோடு துள்ளியெழுந்து “ஆகா, நீயல்லவா சிறந்த பண்டிதன், மனிதனைப் பற்றி எவ்வளவு சரியாக, தெளிவாக அறிந்து வைத்திருக்கிறாய்! என் கவலை உன்னால் தீர்க்கப்பட்டுவிட்டது அப்பனே!” எனக் கூறிய தேவேந்திரன் சத்யம் எனும், ஆன்மாவை அறிந்து கொள்ளும் இரகசியத்தை, பிறப்பு இறப்பு அற்ற உண்மையெனும் ஒளியை மனிதனின் உள்ளே அவன் இதயத்தில் புதைத்து வைத்தான். இதை அறியாத மனிதனும் விண் - மண் - காற்று - என ஆராய்ந்து அலைந்து திரிந்து கொண்டிருக்கிறான்.



www.worldtamilacademy.com

# 7. மரணம்

ஏழை மனிதன் ஒருவன் புத்தரை விருந்துக்கு அழைத்திருந்தான். அவனால் வேறு எதுவும் வாங்க முடியாத நிலையில் எப்போதோ பக்குவப்படுத்தப்பட்ட [காளான்] நாய்க்குடைகளை எடுத்துச் சமைத்திருந்தான்.

அந்த உலர்ந்த நாய்க் குடைகள் விஷமாகிவிட்டிருந்தவை. புத்தர் அதைச் சுவைக்கும்போதே கசப்பாய் இருந்தது. ஆனால் அந்த ஏழை விசிறியால், விசிறியவாறு ஆனந்தக் கண்ணீர் சொரிய, நின்று கொண்டிருந்ததைப் பார்த்த புத்தர் எதுவும் கூறாமல் உண்டு முடித்து விட்டார். அது மிகவும் கடுமையான விஷம். அவர் தன் இருப்பிடம் திரும்பியதும் நினைவை இழந்து விழுந்து விட்டார். வைத்தியர்கள் இனி பிழைப்பது சாத்தியமில்லை எனக் கூறி விட்டனர்.

அந்தப் பேதை மனிதன் "அது கசப்பாய் இருந்தது என்று ஏன் கூறவில்லை சுவாமி" என அரற்றி அழுது புரண்டான். சிறிதளவு நினைவு வந்தபோது புத்தர், "உன் கண்களில் ஆனந்தத்தைக் கண்டேன். நாய்க் குடையின் கசப்பையும் கண்டேன், என் இரத்தத்தில் பரவும் விஷத்தையும் கண்டேன், என்னை அணுகி வரும் மரணத்தையும் கண்டேன். பிறகு நான் நினைத்தேன். மரணத்தை யாரும் தடுக்க முடியாது.

இன்றில்லாவிட்டால் நாளை அது வந்தே தீரும். ஆதலால் நாய்க்குடை கசப்பாக இருந்தால் அதன் மீது வெறுப்பு ஏன்? இன்றில்லாவிட்டாலும் நாளை வரும் மரணம். இந்தச் சிறிய விசயத்திற்காக உன் சந்தோசத்தையும், மகிழ்ச்சியையும் பறிப்பவனாக நான் ஏன் ஆகவேண்டும்? நான் கசப்பு எனக் கூறியிருந்தால், உனது மகிழ்ச்சி கச[ப்பாக] மாறியிருக்கும்.


www.worldtamilacademy.com



ஆகவே நான் பூரணமாக ஆனந்தமடைந்தேன்” என்றார்.

இறப்பதற்கு முன் புத்தர் தன் பிட்சுகளை அழைத்து, “எந்த மனிதன் புத்தருக்கு கடைசி போஜனம் அளித்தானோ! அவன் பரம புண்ணியவான் எனக் கிராமம் முழுவதும் பறை அறிவியுங்கள்” என்றார். பிட்சுகள் கலங்கினர். அவன் கொலைகாரன் என்றனர். புத்தர், “உங்களுக்குத் தெரியாது, ஆயிரக் கணக்கான வருடங்களில் புத்தரைப் போன்ற ஒருவர் பிறக்கும்போது முதல் உணவு அளித்த

தாயின் பாக்கியத்துக்குக் கடைசி உணவு அளித்தவன் பாக்கியம் சற்றும் குறைந்ததல்ல!" என்றார்.

எல்லோரும் சென்ற பிறகு ஆனந்தர் மட்டும் நின்றார். "நீங்கள் கூறுவதை என் மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது" என்றார். புத்தர், "ஆனந்தா, நீ புரிந்து கொள்ள மறுக்கிறாய். விஷம் தன் வேலையைச் செய்தது. அந்த மனிதனோ தன் வேலையைச் செய்தான். நான் புத்தன், என்னை எனது குண தர்மத்திற்கேற்பச் செயல் புரியவிடு! இல்லையென்றால், மக்கள் என்னை என்ன சொல்வார்கள்? நான் இதைக் கூறாமல் இறந்துவிட்டால், நீங்கள் அனைவரும் சேர்ந்து அவனைக் கொலை செய்து விடலாம், அல்லது அவன் வீட்டைக் கொளுத்திவிடலாம். நீ இதைச் செய்யவில்லையென்றால் ஜென்ம ஜென்மாந்திரத்திலும் தேவையற்ற அவமானமும் நிந்தனையும் அடைவீர்கள்" எனக் கூறினார்.

எத்துணை அழகான மரணம்! எத்துணை அருமையான மகிழ்ச்சி! எத்துணை ஆழமான சொற்கள்!

கடவுளே! மனித வர்க்கம் ஒரே ஒரு கணமாவது சிந்திக்குமா?

எல்லாப் பொருள்களும் தத்தம் குணத்தால் அறியப்படுகின்றன. விஷம் கசப்பு. விருந்தளிப்பவன் ஆனந்தமடைபவன். விருந்துண்பவன் ஆனந்தமடைபவன். நான் பூரணமான ஆனந்தம் அடைந்தேன். விஷம் என்னை அழிக்க முடியாது. விஷத்தின் குணம் சரீரத்தை அழிப்பது. நான் சாட்சி காண்பவன். இறப்பவன் அல்ல! - என்றார் புத்தர்.

நன்றி

"ஓஷோ பகவத்கீதை அதீதா பப்ளிகேஷன்ஸ்"

# ௮. இரத்தினக்கல்

பாடலிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அசோகச் சக்ரவர்த்தி மகத தேசத்தை ஆண்டு கொண்டிருந்த காலம் அது. மிகச் சிறந்த வீரரான அவர் அண்டை அயல் நாடுகளையெல்லாம் போரிட்டுக் கைப்பற்றித் தன் இராஜ்யத்தை விஸ்தரித்துக் கொண்டிருந்தார். அப்படி வெற்றி பெற்ற நாடுகளிடம் கிடைத்த வைரம், வைடூரியம், நவரத்தினம் எனப் பல்வேறு விதமான கற்களை ஏராளமாகச் சேகரித்துத் தன் கஜானாவில் நிரப்பி இருந்தார். தான் சேகரித்து வைத்திருந்த அளவு அழகிய விலையுயர்ந்த கற்கள் வேறு எங்கும் இருக்கவில்லை என்ற இறுமாப்பும் அவரிடமிருந்தது. ஒரு நாள் புகழ்பெற்ற பௌத்தத் துறவி ஒருவர் அரண்மனைக்கு வருகை தந்தார். அவரிடம் நீண்ட நேரம் பல்வேறு கருத்துக்களைக் கேட்டறிந்த அரசன் தன் கஜானாவில் சேகரித்து வைத்திருக்கும் கற்களையும் காட்டத் தவற வில்லை.

“சுவாமி! நீங்கள் பல நாடுகளைச் சுற்றி வந்திருக்கிறீர்கள். ஆனால் இப்படிப்பட்ட ஒளிவீசும் கற்களை எங்காவது கண்டதுண்டா?” எனப் பெருமிதத்துடன் வினவினார். துறவியின் முகத்தில் புன்னகை அரும்பியது. “ஆம் அரசே! இதைவிட விலை மதிக்கமுடியாததும் பல மடங்கு பெரியதுமான கல்லைப் பார்த்திருக்கிறேன்” என்றார் துறவி. அரசரால் நம்ப முடியவில்லை. “அப்படியா சுவாமி! நான் உடனே அதைப் பார்த்தாக வேண்டும். அது எங்கே இருக்கிறது எனச் சொல்லுங்கள்” என்றார். “அதிக தூரம் ஒன்றுமில்லை அரசே. இதோ உன் நாட்டின் எல்லையில்தான் இருக்கிறது. இப்போது வேண்டுமானாலும் சென்று பார்க்கலாம்”.



www.worldtamilacademy.com

சக்கரவர்த்தி இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. "என்ன! என் நாட்டிலா? இதைவிடப் பெரிய கல்லா? இருக்க முடியாது! அதுவும் நான் அறியாமல் இருக்கவே முடியாது" என்றார். "நான் அதை உனக்கு இப்போதே காட்ட முடியும். நாம் போவோம் வா!" என அரசரோடு புறப்பட்டு விட்டார் துறவி.

ஊரின் எல்லை வந்தது. அங்கு அரண்மனைக்குச் சொந்தமான ஒரு சத்திரத்திற்குள் துறவி புகுந்தார். அரசருக்கு ஒன்றும் புரியவில்லை. துறவியைப் பின்பற்றினார். தானியம் அரைக்கும் மிகப்பெரிய கல் ஒன்று அங்கு போடப் பட்டிருந்தது. வழிப்போக்கர்கள் தங்கும் போது மாவு அரைத்து உணவு தயாரிப்பதற்காகப் போடப்பட்ட கல் அது. துறவி அதைச் சுட்டிக் காட்டி "அரசே! பார்த்தாயா, உன்னிடம் இருக்கும் கல்லை விட இது எத்தனை மடங்கு பெரியது என்று?" "அரசனுக்குச் சினம் பொங்கியது. சுவாமி! என்ன, என்னைக் கேலி செய்கிறீரா? மாவு அரைக்கும் இக்கல் எங்கே? விலை மதிப்பற்ற அந்தக் கல் எங்கே? என்ன நினைத்துக் கொண்டு சொல்கிறீர்கள்" என்றான் கோபத்தோடு, 'இல்லை அரசே! நான் உண்மையைத் தான் சொல்கிறேன். உன் மூதாதையர் காலந்தொட்டு இந்தக்கல் இங்கே இருக்கிறது. இங்குத் தங்குவோர் அனைவரின் பசியையும் போக்கி அரச வம்சத்தின் புகழை ஞாபகப்படுத்துகிறது. பல பசியாறிய வழிப் போக்கர்கள் உன்னையும் உன் மூதாதையர் களையும் வாழ்த்தி வணங்கி விட்டுச் செல்கின்றனர். ஆனால் உன்னிடம் உள்ள கல் அதை வைத்திருந்த அரசர்களை மட்டுமன்றி பல்லாயிரக்கணக்கான வீரர்களையும் பறித்தன. இளம் மங்கையர்களின் வாழ்வையும் பறித்தது.


www.worldtamilacademy.com



அவர்களை விதவையாக்கியது. இப்போது சொல் அரசே அனைவரின் இரத்தத்திலும் தோய்ந்தெடுக்கப்பட்ட அந்தக் கல் உயர்ந்ததா? பலரின் பசியைப் போக்கி நின் புகழ் பாடும் இந்தக் கல் உயர்ந்ததா?" அரசன் அசையாது நின்றான். அவன் அறிவுக் கண் திறந்தது. "ஆம் சுவாமி தாங்கள் கூறுவதே உண்மை . இனி நான் என் உயிர் உள்ள வரை போர் புரிய மாட்டேன்! அன்பே என் வழியாகக் கொண்டு வாழ்வேன். என்னுடைய இந்தச் செயலுக்காக என்னை மன்னித்தருளுங்கள் சுவாமி" என்றார்.

பாரத தேசத்தில் போற்றப்படும் அரசர்களில் இவரும் ஒருவராகத் திகழ்கிறார்.



www.worldtamilacademy.com

# 9. இருளும் ஒளியும்

முன்னொரு காலத்தில், ஓர் அரசனுக்கு நீண்ட நாட்கள் குழந்தையில்லாமல் இருந்தது. பிற்காலத்தில் அருமையான ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அரண்மனையில் குழந்தை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரலாயிற்று. குழந்தை வளர வளரக் கூடவே மட்டுமிதமற்ற துடுக்குத்தனமும் வளரத் தொடங்கிற்று. ஓடுவது, தாண்டுவது, குதிப்பது போன்ற விளையாட்டுகளில் மிக அதிகமாக ஈடுபட்ட காரணத்தினால், ஒருநாள் சிறுவனுடைய கால் இடறி விழுந்து சரிப்படுத்த இயலாத அளவு ஊனமடைந்து விட்டது. அதனால், அவன் குந்திக் குந்தி நடக்க நேர்ந்தது. ஊனமுற்ற குழந்தையைப் பார்த்துப் பார்த்து ஈன்றோர் உளம் வருந்தினார்கள்.

தைமூர்லங்க் என்ற பெயருடன் ஊனமுற்ற அந்த அரச குமாரன், பிற்காலத்தில் தேசத்துக்கு அதிபதியானான். ஆயினும், அவன் உள்ளமோ ஊனமடைந்து விட்டிருந்தது. எனவே, உள்ளமும், உடலும் ஊனமில்லாத நல்ல மனிதர்களைக் காணும் போது அவனுடைய உள்ளத்தில் குரூர குணம் உண்டானது. ஒவ்வொரு நாளும் சேவகர்களைவிட்டு நல்ல மனிதர்களைப் பிடித்துக் கொண்டு வரச் செய்து குற்றவாளிகளைப் போன்று தன் முன் நிறுத்தி மனிதத் தன்மைக்குச் சிறிதும் ஒவ்வாத குற்றங்களைச் சுமத்தி அவர்களைத் தண்டித்து அவன் மன மகிழ்ச்சி அடைந்தான்.

மனிதத் தன்மையை அறவே இழந்துவிட்ட இந்த மாபாவி மன்னனுக்கு, தகுந்ததாக எதிர்காலம் என்ன வைத்துக் கொண்டுள்ளதோ அளிப்பதற்கு!


www.worldtamilacademy.com

இறந்தகாலம் இவனுக்குத் தகுதியான வரலாறு எப்படி எழுதப் போகிறதோ? அதை நாம் அறியோம்.

வழக்கம்போல, அன்றைய நாள், மிகவும் துக்ககரமான ஒரு நாளாக அமைந்துவிட்டது. தண்டனைக்காக, அன்று நூற்றுக்கு மேற்பட்ட குற்றவாளிகள், அவனெதிரில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். வரிசையாக நிறுத்தப் பட்டிருந்த இக்குற்றவாளிகளில் முதல் ஆளாக நிறுத்தப்பட்டவர் புகழ் வாய்ந்த உருது மொழிக் கவிஞர் அகமது. தான் செய்த குற்றம் தான் என்ன? எதற்காக என்னைக் கொண்டு வந்து இங்கே நிறுத்தியிருக்கிறார்கள்? என்ற ஆழ்ந்த சிந்தனை அவருடைய முகத்தில் தேங்கி இருந்தது. தைமூர்லிங்க், கவிஞர் அகமதுவைக் கண்டவுடனேயே சற்று வியப்படைந்தவனாய், “ஓகோ, கவிஞர்! உங்கள் பெயர்தானே அகமது! உங்களுடைய ஒவ்வொரு பாடல் வரியும் சுத்தமான வெள்ளியைக் காட்டிலும் பத்தரை மாற்றுத் தங்கத்தைக் காட்டிலும் விலை மதிப்புடையது அல்லவா?” என்று கிண்டல் செய்தான்.

கவிஞர் அகமது தலையைத் தாழ்த்தாது, “ஆமாம், இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்றார்”. “அப்படியா! அப்படியானால் இந்தக் குற்றவாளிகளில் ஒவ்வொருவருக்கும் நீர் நிர்ணயிக்கும் மதிப்பீடு தான் என்ன?” என்றான் அரசன். “ஒவ்வொருவனுடைய விலை மதிப்பும், ஒவ்வொரு விதமாக இருக்கும். இப்பொழுது இங்கே உங்களுக்கு எதிரில் தண்டனைக் குள்ளாகி நின்று கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான மனிதர்களின் சராசரி விலை சுமார் நான்கு கோடி ரூபாய்கள் மதிப்பிடலாம்” என்றார் கவிஞர் அகமது.

இது அரசன் எதிர்பாராத பதிலாக இருந்தது. உள்ளத்தில் உதித்த சினம், அவனுடைய கண்களைச் சிவக்கச் செய்தது. தன் பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டான்.


www.worldtamilacademy.com

கோபக் குரலில் "என்ன சொன்னாய்?" ஒருவனுடைய விலை நான்கு கோடி ரூபாய்களா? அப்படியானால் இந்த நாடு முழுவதையும் கட்டி ஆட்சி செய்கிற அரசனாகிய என்னுடைய மதிப்பீடுதான் என்ன?" என்று ஆவேசமாகக் கேட்டான்.

கவிஞர் புன்னகை புரிந்தார். சாதாரணமான குரலில் "உங்களுடைய விலை சற்று அதிகமாகவே வைத்து மதிப்பிட்டாலும் ஒரு நூறு ரூபாய்களுக்கு மேற்பட முடியாது" என்றார். "அடே என்ன உளறுகிறாய்; நாவினை இறுக்கிப் பிடி; நீ யாரை இவ்விதமாகக் கிண்டல் செய்து கொண்டிருக்கிறாய் என்பதை நினைத்துப் பார்த்தாயா? சாவின் எல்லையில் நிறுத்தப் பட்டிருக்கும் உனக்கு இன்னமும் என்னோடு விளையாடும் எண்ணமா? நான் அவ்வளவுக்கு ஓர் அற்பனா?" என்று அரசன் கர்ஜனை செய்தான்.

இந்தக் கர்ஜனைக்குக் கவிஞர் ஒரு துளியுங்கூட அச்சப்பட்டவராகத் தெரியவில்லை. உள்ளத்தில் ஒளிவு மறைவு இல்லாது நயமான குரலில் சொல்லத் தொடங்கினார்: "அரசர் வீணாக இவ்வாறு ஆவேசப்படவேண்டிய அவசிய மில்லை. நான் சொன்ன விலை மதிப்பு உங்களுக்கல்ல, நீங்கள் அணிந்து கொண்டிருக்கிற அணிகலன்களுக்கும், ஆடைகளுக்கும் மட்டும்தான் அது". "அப்படியானால் நீ எனக்கு நிர்ணயம் செய்த விலை மதிப்பீடுதான் என்ன?" என்று கேட்டான். உங்களுக்கு ஒரு விலையை மதிப்பிட்டுக் கூறுவது இயலாததாக உள்ளது. ஏனெனில் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்த எவன் ஒருவனின் இருதயத்தில் ஈவு, இரக்கம், நீதி, ஒழுக்கம், கருணை, அன்பு, சத்தியம் என்னும் இவை இருக்கவில்லையோ அப்படிப்பட்ட ஒருவனை யாரும் மனிதனென்று கூட மதிக்க மாட்டார்கள்.



ஆனதினால் தாங்கள் ஒரு விலை மதிப்பிட முடியாத மகாத்மாவாகவே கூட இருக்கலாம்". கவிஞர் அகமது தமது திடமான குரலில் கூறிய இந்த வார்த்தைகள், அரசனுடைய நெற்றியில் சுத்தியைக் கொண்டு ஓங்கி அடித்தது போல மிகமிகக் கடினமான வலியை ஏற்படுத்தின. எதுவும் சொல்லத் தோன்றாமல் திக்பிரமை பிடித்தவன் போலச் சற்று நேரம் உட்கார்ந்த வாறு இருந்தான்.



www.worldtamilacademy.com

அவனுடைய உள்ளத்தில் அச்சம் படிந்தது போலிருந்தது. உடல் மட்டுமன்றி, கை கால்களும் நடுங்கலுற்றன. உடனடியாக குற்றவாளிகளாக அன்று கொண்டு வந்து அங்கு நிறுத்தப் பட்டிருந்த அனைவரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டான். இந்த ஆன்மீக அறநெறியை அஞ்சா நெஞ்சத்துடன் எடுத்துக்காட்டி, விலங்குத் தன்மையிலிருந்து, தன்னை மனிதத் தன்மைக்கு மாற்றிய கவிஞர் அகமதுவுக்கு நன்றியும், வணக்கமும் தெரிவித்தான். தன்னுடைய அகக்கண்ணைத் திறக்கும்படி செய்த கவிஞர் அகமதுவை மிகவும் அழுத்தமாக உடலோடு ஒட்டத் தழுவிக் கொண்டு கவிஞருக்கு வேண்டிய அளவு உபசாரம் செய்து உள்ளம் உவக்க அரண்மனையிலிருந்து அவரை வீட்டிற்குச் சிவிகையில் ஏற்றி அனுப்பி வைத்தான் தைமூர்லங்க்.

# 10. கேள்வியும் பதிலும்

ஹிட்லரின் பிரச்சார மந்திரியாக இருந்தவர், கோயபெல்ஸ். ஒரு முறை அவர் ஒரு வயோதிக யூதப் பாதிரியாரைச் சந்தித்தார். கோயபெல்ஸ் அவரை "நீங்கள் யூதர்கள். உங்களுடைய மத தர்மநூல் "தால் முத்" என்று சொல்லப்படுகிறது. அதை நீங்கள் நன்கு பயின்றிருப்பதனால் ஒரு விதமாக தார்மீக ரீதியில் தர்க்கம் செய்கிறீர்கள் என்றும், அதிலிருந்து உங்களுடைய அறிவுச் சக்தி வெளிப்படுகிறது என்றும் நான் கேள்விப்பட்டுள்ளேன். நீர், எனக்கு அதைக் கற்பிப்பீர்களா?" என்றான்.

இதனைக் கேட்ட பாதிரியார், விருப்பும் வெறுப்புமற்ற பாவனையோடு சாந்தமான குரலில், "அதை நான் உங்களுக்குக் கற்பிப்பதில் எந்த விதத் தயக்கமும் இல்லை . ஆனால், அந்த அரிய நூலை நீர் கற்றுக் கொள்வதற்கான வயதுதான் கடந்து போய்விட்டது" என்றார், பாதிரியார்.

"என்ன?, இந்த வயதில் அதனை நான் கற்றுக் கொள்ள முடியாதா? அது அவ்வளவு கடினமான ஒரு நூலா?" என்று சற்றுத் தன் குரலை உயர்த்தினான் கோயபெல்ஸ்.

"ஐயா, உண்மையைச் சொன்னால், யூத இனத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன், அந்த மத நூலைக் கற்க விரும்பினாலும் கூட, அவனை நாங்கள் தீரப் பரிசோதிப்போம். முதலில் மூன்று கேள்விகளைக் கேட்போம். அவற்றிற்குச் சரியாக விடை அவன் தரவில்லையெனில் அவனுக்கு அது கற்பிக்கப்படுவதில்லை" என்று வினய பூர்வமாக அறிவித்தார், பாதிரியார்.


www.worldtamilacademy.com

“நல்லது, அப்படியானால், அப்பரிசோதனையை இப்போதே தொடங்குங்கள். நான் அதில் நிச்சயம் தேர்ச்சி பெறுவேன்” என்றான், கோயபெல்ஸ்.

“மிகவும் நல்லது, கேளுங்கள் : இரண்டு வாலிபர்கள் புகையும், புழுதியுமாகவுள்ள ஒரு குழாய்க்குள் புகுந்து சற்று நேரம் விளையாடுகிறார்கள். பிறகு, வெளியே வந்து நேருக்கு நேர் நின்று ஒருவனையொருவன் பார்க்கிறான். அவர்களில் ஒருவன் புழுதியும் புகையும் படிந்த உடையும், உடல் முழுவதும் அழுக்குப் படிந்தவனாகவும் காணப்படுகிறான்.

மற்றொருவனுடைய உடலிலோ உடையிலோ ஒரு துளியுங் கூட அழுக்குப் படிந்திருக்கவில்லை. அந்த இருவரில், “உடனே சென்று குளிக்க வேண்டும்” என்ற எண்ணம் யாருக்கு முதலில் தோன்றக்கூடும் சொல்லுங்கள் பார்க்கலாம்” என்ற தன்னுடைய முதல் கேள்வியைக் கேட்டார், அந்தச் சாதுவான பாதிரியார்.

“ஓ, இதுதானா அந்தக் கேள்வி? இதில் யோசிக்க, என்ன சிரமம். அழுக்குப் படிந்திருந்த வாலிபன் தான் முதலில் போய்க் குளிப்பான்” என்றான்.

கோயபெல்ஸின் இந்த விடையைக் கேட்ட பாதிரியார், “தப்பு ............. அழுக்குப் படியாதிருந்த வாலிபன் தான் முதலில் போய்க் குளிப்பான்” என்றார்.

“எப்படி?” என்று வியப்பாகத் திருப்பிக் கேட்டான், கோயபெல்ஸ்.

“எப்படியென்றால், இருவரும் விளையாடி விட்டு வெளியே வந்து ஒருவனை ஒருவன் பார்த்துக் கொள்கிறான். அழுக்குப் படிந்த வாலிபன், மற்றவனைப் பார்த்து ‘புகையும், புழுதியும் படிந்த குழாயுக்குள் சென்று விளையாடி விட்டு வந்தும், தனக்கு ஒரு துளி அழுக்கும் படியவில்லையல்லவா?


www.worldtamilacademy.com

என்று யோசித்தால் அழுக்குப்படியாத மற்ற வாலிபன், இந்த அழுக்குப் படிந்தவனைப் பார்த்தவுடனே, ‘இருவரும் அழுக்குப் படிந்தவராயுள்ளோம்’ என்று யோசித்தவாறு குளிப்பதற்காக உடனே முயலுவான்” என்றார், பாதிரியார்.

“உங்களுடைய பதில் மிகவும் சரியானது. அப்படியே இருக்கலாம். சரி அடுத்த கேள்வியைக் கேளுங்கள்” என்றான், கோயபெல்ஸ்.

“இரண்டாவது கேள்வி: இரண்டு வாலிபர்கள் புகையும் புழுதியுமாகவுள்ள ஒரு குழாய்க்குள் புகுந்து சற்று நேரம் விளையாடுகிறார்கள். பிறகு வெளியே வந்து நேருக்கு நேர் நின்று ஒருவனையொருவன் பார்க்கிறான். அவர்களில் ஒருவன் புழுதியும், புகையும் படிந்து உடையும், உடல் முழுவதும் அழுக்குப் படிந்தவனாகவும் காணப்படுகிறான். மற்றொருவனுடைய உடலில் ஒரு துளியுங் கூட அழுக்குப் படிந்திருக்கவில்லை. அந்த இருவரில் ‘உடனே சென்று குளிக்க வேண்டும்’ என்ற எண்ணம் யாருக்கு முதலில் தோன்றக் கூடும்?”

“இது, முதலில் கேட்ட அதே கேள்விதான்,, என்றான், கோயபெல்ஸ்.

“அல்ல; இது முற்றிலும் வேறான கேள்வி, என்றார், பாதிரியார்.

“அப்படியே இருக்கட்டும். இந்த இரண்டாவது கேள்வியில் நீர் என்னைத் தோற்கடிக்க முடியாது. அழுக்குப் படியாதிருந்த வாலிபனே, முதலில் குளிக்க முயலுவான்” என்றான், கோயபெல்ஸ்.

“தப்பு” என்றார், பாதிரியார். அப்படியானால், இந்த விடை உங்களாலேயே முன்னால் சொல்லப்பட்டதல்லவா” என்றான் கோயபெல்ஸ்.


www.worldtamilacademy.com



“அந்தக் கேள்வி, வேறொன்றைப் பற்றியது. இந்தக் கேள்வியின் சரியான விடை அதுவல்ல. அழுக்குப் படிந்த வாலிபன் தான் முதலில் குளிக்கச் செல்கிறான்’ என்பதுவே இந்தக் கேள்வியின் விடை எப்படியென்றால், முன்பு போலவே இருவரும் நேருக்கு நேர் நின்று ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும் போது, அழுக்குப் படியாதிருந்த வாலிபன் அழுக்குப் படிந்தவனைப் பார்த்து,

‘ஐயோ, நானும் இவனைப் போன்று தான் அழுக்கடைந் திருப்பேன் என்று சிந்திக்கிறான். ஆனால், உடனே தன்னைத் தான் பார்த்துக் கொண்டு அவனைப் போல் நான் மாசு படிந்தவனாகயில்லை என்று நினைப்பான். அப்போது, அழுக்குப் படிந்த வாலிபனும், தன் தோழனைக் கண்டு தானும் இவனைப் போலவே மாசற்றவனாக உள்ளேனோ? - என்று தனக்குள்ளேயே எண்ணுவான். மேலும் தன்னுடைய உடலையும், உடையையும் உற்றுப் பார்ப்பான். அவனுடைய அழுக்கு படிந்த தோற்றம் “உடனேயே குளிக்க வேண்டும்” என்ற எண்ணத்தை உண்டாக்கக் கூடுமல்லவா?” என்றார் பாதிரியார்.

“ஓ, மிகவும் சரி, உம்முடைய சாதுர்யத்துக்கு ஒரு அளவை என்னால் காண இயலவில்லை. சரி, அந்த மூன்றாவது கேள்வியையும் கேட்டு விடுங்கள்” என்றார், கோயபெல்ஸ்.

“மூன்றாவது கேள்வி : மிகமிகக் கடின மானது. இரண்டு வாலிபர்கள் புகையும், புழுதியுமாகவுள்ள ஒரு குழாய்க்குள் புகுந்து சற்று நேரம் விளையாடுகிறார்கள். பிறகு வெளியே வந்து .........”

“இதுவும் நீர் முன்பு கேட்ட கேள்வியே” ,

“அல்ல............... சொற்கள் மட்டும் அவைகளே தான். ஆயினும், கேள்வி முற்றிலும் வேறானது”

“அப்படியானால், அழுக்குப் படியாத வாலிபனே குளிக்க முயலுவான்” என்றான், இடைமறித்து, கோயபெல்ஸ்.

“தப்பு” என்று பாதிரியார் மறுத்தார். “அது தவறென்றால், அழுக்குப் படிந்திருந்த வாலிபன்தான் குளிப்பான்’ என்கிறான், கோயபெல்ஸ்.

“தப்பு” என்றார், பாதிரியார்.

“இரண்டும் தப்பு என்றால், சரியான விடைதான் என்ன?” என்ற அதிகாரக் குரலோடு கர்ஜித்தான், கோயபெல்ஸ்.

“இந்தக் கேள்வியே அறிவீனமானது என்பதுதான் சரியான பதில். எப்படியென்றால் இரண்டு வாலிபர்கள் ஒன்றாகப் போயக குழாய்க்குள் புகுந்து விளையாடினால் ஒருவருக்கு அழுக்குப் படிந்தும் மற்றொருவருக்கு அழுக்குப் படியாதும் இருப்பது தான் எப்படி? இந்தச் சிறிய வினாவில் இருக்கக் கூடிய சிக்கலான, “இயல்புக்கு மாறானது இது” என்று புரிந்து கொள்ளாத ஒருவன் அந்த மகத்தான ‘தால் முத்’ என்ற நூலை எப்படிச் சரியாகப் புரிந்து கொள்ள முடியம். நீங்களே சொல்லுங்கள்” என்றார் யூதப் பாதிரியார்.

பொய் சொல்லியே புகழ் பெற்ற கோயபெல்ஸ்க்கு இந்த உண்மை மிகவும் கசந்தது.



www.worldtamilacademy.com

# 11. ஜுடஸின் முகம்

நான் மிகவும் சிறுவனாயிருந்த போது “அறிஞர்” என மக்களால் போற்றப்பட்ட ஒரு கிழப் பாதிரியார் சொல்ல நான் கேள்விப்பட்ட கதை இது. இந்தக் கதையை என் வாழ்நாளில் நான் அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழ்ந்ததுண்டு. நண்பர்களிடம் கூறியும் குதூகலம் அடைந்திருக்கிறேன்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் “சிசிலியன்” எனும் பட்டினத்தில் ஒரு மாதா கோவில் இருந்தது. கோவிலின் வெளிப்புறச் சுவர்களில் ஏசுவின் இளமை தொட்டு இறுதிகாறும் அவருடைய திருவுருவத்தை வர்ண ஓவியங்களாகத் தீட்டிக் காட்ட வேண்டுமென ஆவலாய் ஒரு ஓவியர் ஈடுபட்டிருந்தார். இவ்வாறு அவர் சித்திரிக்கத் தொடங்கி சில ஆண்டுகள் கழிந்தும் உளஞ்சோராது, உறுதி குன்றாது, தீட்டிக் கொண்டேயிருந்தார். மேலும் தீட்டி முடிக்க வேண்டியிருந்தவை, இரண்டேயிரண்டு ஓவியங்கள் மட்டுமே. அவையாவன : இளமைப் பருவத்திலிருந்த கிறிஸ்துவின் உருவம் மற்றும் ஜீடஸ்க்யாரட்’ உருவம் மட்டுமே. இந்த இரண்டு ஓவியங்களையும் முடிப்பதற்கு இன்றியமையாதிருந்த “ரூப தரிசினிகள்” இருவருக்காக அந்த ஓவியர் ஊர் உலக மெல்லாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிச் சஞ்சரிக்கலானார்.

ஒருநாள், ஒரு சிறிய நகர்ப்புறத்தில் ஒரு கோடியில் அவர் வந்து கொண்டிருக்கும் போது வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சில குழந்தைகள் அவருடைய கண்களுக்குத் தென்பட்டனர். அவர்களில் சுமார் பன்னிரண்டு ஆண்டுப் பருவத்திலான பாலகன் ஒருவனின் முகம் ஓவியக் கலைஞனின் உள்ளத்தை ஈர்த்தது.


www.worldtamilacademy.com

ஒரு திவ்விய ஞானியின் முகத்து ஒளி அந்தச்சிறுவன் முகத்தில் இருந்ததை ஓவியர் கண்டார்.



ஆனால், அந்தச் சிறுவனின் கிழிந்த உடைகளும் உடலும் மிகவும் அழுக்குப் படிந்து இருந்தன. எனினும், ஒரு கலைஞன் விரும்ப வேண்டியதாகவே இருந்தது, அந்தச் சிறுவனுடைய முகம்.

ஏழைப்பட்ட அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் அனுமதியோடு கூடவே அவனை அழைத்துக் கொண்டு ஓவியர் தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

குழந்தை ஏசுவின் திருவுருவம் ஓவியமாகத் தீட்டி முடியும்காறும் ஒவ்வொரு நாளும் அந்தச் சிறுவன் ஓவியர் கருத்துக்கிணங்க அமர்ந்து கொண்டிருந்தான். அவனுடைய பொறுமையும், இயல்பும் ஓவியருக்கு மனநிறைவை அளிப்பதாயிருந்தது. எண்ணியதை எண்ணியவாறு தீட்டி முடித்த இந்த இளமை ஓவியம் மிகமிக இயல்பாக அமைந்து காண்பாரைக் களிப்புறச் செய்தது.

ஆனால், 'ஜூடஸின்' ஓவியத்திற்கான ரூபதரிசினமாய் யாருமே அவருக்குக் கிட்டவில்லை. இடையில் ஒன்றன்பின் ஒன்றாய் இரண்டு ஆண்டுகளும் வந்து சென்றன. சித்திர வரிசையில், இனி எழுதி முடிக்க வேண்டிய ஓவியம் இது ஒன்று மட்டுமே.

எனவே இது நிறைவேறாமல் நின்று போய்விடுமோ' என்ற சஞ்சலமும் அவருக்கு ஏற்படாமல் இல்லை. இந்த மகானின் ஓவிய மாலை எங்கு முழுமையாகமலேயே போய் விடுமோ' என்ற வியாகூலமும், அவர் உள்ளத்தில் வைத்தவாறே ஒவ்வொரு ஊராக ஒரு ரூபதர்சினியைத் தேடத் தொடங்கினார். முதிர்ந்த வயதினராயிருந்தும் அந்த ஓவியர் தன் முயற்சியை மட்டும் இடையில் நிறுத்தவே இல்லை.



www.worldtamilacademy.com

இதற்குள்ளேயே இந்த சித்திரக் கலா வரிசையின் புகழ் எல்லா ஊர்களுக்கும் பரவத் தொடங்கி விட்டது. கோரமான முரட்டு சுபாவமுடைய ஒன்றிரண்டு பேர் ‘ஜுடஸ்’ ஓவியத்திற்கு ஏற்ப எங்களை வைத்து உங்களுடைய மனக்குறை தீர ‘சித்திரத்தைத் தீட்டி முடித்து விடுங்களென்று முன் வந்து ஓவியரிடம் கூறியதுமுண்டு. ஆயினும் ஓவியர் உள்ளம் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. வாழ்க்கையின் அழுத்தத்தைத் தாங்க முடியாத நிலையில் இவர்கள் இயல்பு மாறிற்றே தவிர உளத்தில் மாறியவர்களல்ல. எனவே, ஓவியர் அவர்களை வைத்துச் சித்திரம் தீட்ட ஒத்துக் கொள்ளவில்லை. இயல்பாகவே, கொடிய செயல்களைச் செய்து செய்து முதிர்ச்சியடைந்த ஒரு கொடிய முகத்தை ‘ஜுடஸ்’ ஓவியத்திற்காக அவர் மேலும் தேடத் தொடங்கினார். கலைஞனின் உள்ளம் எளிதில் திருப்தியடைய வில்லை . ‘ஏனாதானம்’ என்பது ஒரு கலைஞனிடம் என்றுமே காணமுடியாது போலும்.

ஒருநாள் உச்சி வேளையில் ஓவியர் அயலூரில் இருந்த ஒரு மதுபானக் கடையில் மது அருந்தியவாறு உட்கார்ந்திருந்தார். அப்போது கந்தல் துணியைக் கட்டியிருந்த மிகமிகக் கோரமான முகத்தையுடைய ஒருவன் தள்ளாடியவாறு வந்து முன் வாசல் படியில் கால் தட்டிக் கீழே விழுந்தான். அந்த நிலையிலேயே ‘மது, மது' என்று அவன் அங்கிருந்தவர்களைப் பார்த்து யாசிக்கலானான். ஓவியர் அவனை மெல்ல எடுத்து நிறுத்தி அவன் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார். அவனுடைய முகபாவம் ஒரு மனிதன் உலகத்தில் செய்ய இருந்த எல்லாப் பாவங்களையும் செய்து முடித்ததாகப் பிரதிபலித்தது.

இதே போன்ற கொடியவன் ஒருவனைத்தான் அவர் இதுகாறும் தேடிக் கொண்டிருந்தார். எனவே, அவர் தம்முடைய எண்ணம் கைகூடும் காலம் வந்து விட்டது.


www.worldtamilacademy.com

என்ற மன நெகிழ்ச்சியோடு அந்த மகாப் பாவியை மெல்லத் தன் முகமாகத் திருப்பி, "என்னோடு நீ கூடவே வா, நான் உனக்கு வேண்டிய மது, மாமிசம் இன்னும் நீ விரும்புகின்றதனைத்தையும் நிறையத் தருகிறேன், ஒவ்வொரு நாளும் தவறாது நீ குடிக்குமளவு மதுவும், அதுவுமின்றி உணவும் தருகிறேன்; உடைகளும் தருகிறேன். மேலும், நீ விரும்பினால் கைநிறையக் காசும் தருகிறேன்" என்று கூறி வற்புறுத்தினார்.

இறுதியாக அந்தக் கொடியவனான ஜுடஸின் தோற்றத்திற்குப் பொருத்தமான 'ரூப தரிசினியாய் ஒருவன் ஓவியருக்குக் கிடைத்து விட்டான். இரவு, பகல் என்ற பேதத்தையும் மறந்தவராய் வெறிபிடித்தவரைப் போல உடல் சிரமம் பாராட்டாது அந்த ஓவியர் அவனை வைத்துக் கொண்டு தம்முடைய, மகத்தான ஓவிய வரிசையைத் தீட்டி முடிப்பதில் உளமொன்றிப் போனார். இது முடியும் தறுவாயில் அந்தக் கொடிய ஜுடஸ் ரூப தரிசினியாயிருந்தவன் ஏதோ ஒருவித மறதி நிலையிலிருந்து நினைவு நிலைக்கு வந்தவனைப் போல் அவனிடம் மாற்றும் தெரிந்தது. திக்பிரமை பிறப்பதற்கு மாறாய் ஒருவிதமான தெளிந்த உத்வேக உணர்ச்சி அவனுடைய முகத்தில் தென்படலாயிற்று. பயம் கலந்த பார்வையோடு தனக்கெதிரில் உருவாகிக் கொண்டிருக்கக்கூடிய தன்னைப் போன்ற ஒரு ஓவியத்தை அவன் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள், அந்த மனிதனின் முகபாவம் மாறியிருப்பதைக் கண்ட அந்த ஓவியர் தான் செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்துக் கேட்டார்; 'அப்பா' உனக்கு என்ன நேர்ந்தது? உனக்கு ஏதாயினும் தொந்தரவு ஏற்பட்டிருந்தால் தயங்காமல் நீ என்னிடம் சொல்.


www.worldtamilacademy.com

நான் அதற்கு வேண்டிய உதவி செய்கிறேன்' என்றார். இதைக்கேட்ட அந்த ரூபதரிசினி முகத்தைக் கவிழ்த்தவாறு விக்கி விக்கி அழத் தொடங்கினான். ஒருபாட்டம் அழுது முடித்து விட்ட பிறகு வயோதிக ஓவியரின் முகத்தை உற்று நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

ஐயா, நீங்கள் என்னை அடியோடு மறந்து விட்டீர்கள். பல ஆண்டுகளுக்கு முன் உங்களுடைய இளம் ஏசுவின் ஓவியத்திற்கு ரூபதரிசினியாக இருந்த சிறுவன் நானேயல்லவா? இதை நீங்கள் எப்படி மறந்தீர்கள்?" என்று மேலும் அழத் தொடங்கினான்.

இந்த ஜுடஸ் யார்? ஏசு கிறிஸ்துவை, விசுவாச துரோகியாகச் சத்துருக்களின் வசம் காட்டிக் கொடுத்த அவருடைய சீடன்.



www.worldtamilacademy.com

# 12. அரசனும் அறிஞனும்

இந்தக் கதை இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்தது. ஆசியாக் கண்டத்தில் 'லிடியா' என்ற பிரதேசத்தின் ஒரு பகுதியை 'குரேசஸ்' என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனிடத்தில் இருந்த அளவு 'தங்கச் சேமிப்பு' உலகத்தில் வேறு யார் ஒருவரிடமும் இருக்கவில்லை. அவனுடைய நாட்டில் இருந்த மலை ஒன்றிலிருந்து பீறிட்டுக் கொண்டு வந்த ஒரு சிற்றாற்று நீரில், மண்ணும் மணலும் கலந்தவாறு மிக அதிகமாகத் தங்க துகள்களும் கிடைத்து வந்தன. கணக்கற்ற மக்கள் கூலி வாழ்வுக்காக அந்தத் தங்கத் துகள்களைச் சேகரிப்பதுவே அவர்களுடைய வேலையாக இருந்தது.

"தங்கத் துரை" என்றே பிரசித்தி பெற்ற 'குரோசஸ்' அரசனின் ராஜதானியின் பெயர் 'சார்டிஸ்'. ஒரு முறை கிரேக்க நாட்டிலிருந்த பெரிய விஞ்ஞானியும், நீதிபதியுமான 'சொலோன்' என்பவர் உலக யாத்திரை செய்தவாறு குரோசஸின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். குரோசஸ் இந்தப் பெருஞ் செல்வத்தின் காரணமாக ஒரு மதோன் மத்தனாகி இருந்தார். மிகப் பெருமித உணர்வோடு தன்னுடைய அரண்மனையிலிருந்த அந்த மாபெரும் செல்வத்தை அவன் விருந்தினராகிய சொலோனுக்கு விவரித்துக் கூறிக் காட்டினார். அரண்மனையில் நிறுவப்பட்டிருந்த தூண்கள் அனைத்தும் தங்கமாக இருந்தன. அரண்மனையில் உபயோகப்படுத்திக் கொண்டிருந்த பெரியதும் சிறியதுமான எல்லாப் பாத்திரங்களும் தங்கத்தினாலேயே செய்யப்பட்டிருந்தன. குளிக்கும் தண்ணீர்த் தொட்டி முதல் தாம்பூலம் தரித்து, மென்று துப்புவதற்கான காளாஞ்சியங்கூட தங்கத்தினாலேயே ஆக்கப்பட்டிருந்தது.


www.worldtamilacademy.com

மற்றுமுள்ள ஒவ்வொரு பொருளையும் செல்வச்செருக்கோடும், விம்மிதமான குரலோடும் சுட்டிக் காட்டலானான். வியப்புற்ற நிலையில் சொலோன், அரசர் சுட்டிக் காட்டிய அவ்வளவு பொருட்களையும் சகிப்புத் தன்மையோடு பார்த்தார்.

அதன்பின் அரசன் குரோசஸ் கேட்டான். “சொலோன், நீங்கள் பற்பல நாடு நகரங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்துள்ளீர். அப்படி நீங்கள் சுற்றிப் பார்த்த நாடு நகரங்களில் வசிக்கும் மக்களில் மிகமிகச் சுக புருஷன் யார்? உம்மால் சொல்ல முடியுமா?” என்று.

இவன் தன்னையே ஒரு சுக புருஷன் என எண்ணிக் கொண்டு இவ்வாறு வினவுகிறான் என்று சொலோன் எண்ணினார். ஆனால், சொலோன் சொன்னார்: “ஏதென்ஸ் நகரத்தில் தாலஸ் என்ற ஒரு அறிஞன் மிகமிகச் சுக புருஷனாக அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தான்” என்று. அரசன் குரோசஸின் எதிர்பார்ப்பு முற்றிலும் வீணாயிற்று. “அப்படியா, ஆனால் நான் அவருடைய பெயரைக் கூட இதுகாறும் கேள்விப்பட வில்லையே? என்றான்.

“இருக்கலாம், நீங்கள் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டீர். ஆனால், அவர் ஒரு பரோபகாரியாக இருந்தார். தம்முடைய மக்களும் கூட மிகமிக நல்லவர்களாக, மற்றவர்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசை புரிபவர்களாக வாழ்வதை மிக மகிழ்ச்சியோடு அவர் தம் கண்ணாரக் கண்டார். அவர், பழம் போன்ற கிழவனாகி இருந்த முதுமைக் காலத்திலும், தாய்நாட்டைப் பகைவர்கள் முற்றுகையிட்ட போது தம் கூர்மையான அறிவு ஆலோசனைகளினால் பகைவரை வெல்ல எல்லோருக்கும் அவர் உத்வேகமளித்தார்.


www.worldtamilacademy.com



அந்த நல்ல மனிதர் கடைசியாகத் தன்னுடைய நாட்டிற்காகப் போராடி இறந்தார். அவருடைய மரணத்துக்காக ஏதென்ஸ் நகர மக்கள் அனைவரும் தத்தம் கண்ணீரையே ஒரு ஆறாகுமாறு வடித்தார்கள்'' என்றார் சொலோன்.

“போகட்டும், நீர் அதற்கடுத்தபடியாகப் பார்த்த பெரும் சுக புருஷர் யார்?' என்று குரோசஸ் கேட்டான்.



www.worldtamilacademy.com

“தாயையும், தந்தையையும் அன்போடு ஆதரித்து அவர்களை மகிழச் செய்த 'ஜீனோ' என்ற பெயருடைய ஒரு வாலிபன் பெரும் சுக புருஷன்” என்று சொலோன் கூறினார்.

அரசன் குரோசஸுக்கு இதைக் கேட்கவும், ஏமாற்றமடைந்த இருதயத்திலிருந்து கோபம் கொப்பளித்தது. “சொலோன், தரித்திரர்களைப் பற்றியும், பிரக்யாதியற்றவர்களைப் பற்றியும் ஏன் எனக்கு எடுத்துக் கூறுகிறீர். என்னுடைய கீர்த்தியையும், மகிழ்ச்சியையும், செல்வத்தையும் நேரில் கண்டு கூட அவர்களைக் காட்டிலும் நான் சுக புருஷன் என்பதை வாயிலிருந்து சொல்லாக வெளியிட உங்களுடைய சின்னப் புத்தி அனுமதிக்க வில்லையா?” என்று கூக்குரலிட்டான், அந்த அறிவற்ற அரசன்.

அரசனுடைய கோபத்திற்குத் துளியும் சலனமடையாத உள்ளத்தோடு, “அரசே! நீர் இப்பொழுது அளவு கடந்த பெருஞ் செல்வத்தின் உச்சக்கட்டத்தில் அமர்ந்துள்ளீர் என்பது உண்மை . ஆனால், இன்னும் எத்தனையோ ஆண்டு காலம் நீர் இந்த மண்ணில் உயிரோடு இருந்து வாழ வேண்டியவராக உள்ளீர். வியப்புத் தரும் உம்முடைய இந்த மாபெரும் செல்வத்தின் மகிழ்ச்சிகர வாழ்க்கை எந்த முறையில் உம்மை நிறைவுறுத்தவுள்ளது என்று உங்களுக்காகட்டும், எனக்காகட்டும் தெரிந்திருக்கவில்லை. அதனால் இப்போதே உம்மை ஒரு மனிதன் என்று கூட என்னால் சொல்ல இயலவில்லை” என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

ஒரு சில மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் ‘பர்சியா’ தேசத்தின் அரசன் ‘சைரஸ்’ ஒரு பெரிய படையோடு வந்து குரோசஸின் அரண்மனையை முற்றுகையிட்டான்.

கடுமையான போராட்டத்தின் இறுதியில் குரோசஸ் தோல்வியடைந்தது மாத்திரமல்ல, பகைவர்களினால் சிறைப்படுத்தவும் பட்டான்.

இரக்க சித்தமற்ற அந்தச் ‘சைரஸ்’, ‘குரோசஸை’ உயிரோடு சுட்டுப் பொசுக்க வேண்டும் என்று தன்னுடைய படை வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

அந்தப் படை வீரர்கள் பெரும் மரக்கட்டைகளைக் குவித்து அடுக்கிக் கயிறுகளினால் ஆடாது அசையாது பிணிக்கப்பட்டிருந்த தங்கதுரை என்று பெயர் படைத்த குரோசஸை அந்தச் சிதையின் மேல் தூக்கிப் போட்டார்கள். சிதை உடனேயே நெருப்பும் மூட்டப்பட்டது.

இப்போது, குரோசஸின் இரண்டு கண்களிலும் தாரை தாரையாகக் கண்ணீர் வழியத் தொடங்கிற்று. அவன், ‘சொலோன், சொலோன், சொலோன்’ என்று கூவலானான். அங்கேயே நின்று இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த கல் நெஞ்சனனான ‘சைரஸ்’ இந்தக் குரோசஸைப் பார்த்து, “ஏன் சொலோன், சொலோன்’ என்று கூவினாய்? இதனுடைய அர்த்தமென்ன?” என்று கேட்டான்.

உடனே, குரோசஸ் தன்னுடைய அரண்மனைக்கு அன்றொரு நாள் வந்திருந்த யாத்ரிகர், சொலோனுக்கும் தனக்கும் இடையே நடந்த சம்பாஷனைகளை விவரித்துக் கூறி மேலும் “மிகப் பெரும் செல்வந்தனான தன்னுடைய இறுதி வாழ்வின் நிலை எப்படியாகிறதோ தெரியவில்லை என்று சொல்லி இருந்தது, இப்போது என் நினைவுக்கு வந்தது. அதனால் அந்தப் பேரறிஞர் சொலோனுடைய பெயரைச் சொல்ல நேர்ந்தது” என்றான்.

குரோசஸ் சொன்ன, இந்த வார்த்தைகளை அரசன் சைரஸ் கூர்ந்து கேட்டான். தன் உள்ளத்தை அவை ஓரளவு மாற்றமடையச் செய்வது போலிருந்தது. எனவே, "உண்மை, உண்மை, ஆம், அவர் சொன்னது உண்மை . நான் கூட இன்னும் வெகுகாலம் வாழ வேண்டியவனாக உள்ளேன். "என்னுடைய வாழ்வின் முடிவும் கூட என்னால் முன் கூட்டி அறியக் கூடாததாகவுள்ளது" என்று எண்ணி, படைவீரர்களைக் கூவி உடனே, "இந்த எரியும் நெருப்பை அவித்து விடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

மேலும் கூறினான். "படைவீரர்களே, உதாரகுணத்தோடு நான் குரோசஸை மன்னித்திருக்கிறேன். எனவே குரோசஸை இந்த நாட்டிற்கு அரசனாக ஆக்கி விட்டு நாம் நம்முடைய நாடாகிய 'பரிசியா'வுக்குத் திரும்பலாம்", என்றான்.

குரோசஸ் மறுபடியும் அரசனானான். அன்றிலிருந்து தங்கம் தேடும் பழக்கத்தை அறவே கைவிட்டான். கூலியாட்களுக்கு விமோசனம் ஏற்பட்டதன்றித் தன்னுடைய பொருள்களையும்கூட எல்லாருக்கும் பங்கிட் டளித்து நல்ல பெயரெடுத்தான். பிற்காலத்தில் குரோசஸ் மக்களால் மிகவும் பாராட்டப் படுபவனாக வாழ்ந்து வரலானான்.

பணத் திமிர், அதிகாரத் திமிர் எவரிடம் இருக்கிறதோ அவர் தமக்குத் தாமே நாசம் தேடிக் கொள்கிறார் என்பதற்குச் சரியான மேற்கோள் கதை இதுவல்லவா?

# 13. புண்ணிய பூமி

1884-இல் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ‘பிராங்லின் பியர்ஸ்’, அந்த தேசத்தின் ஆதிவாசிகளான சிவப்பு இந்தியரிடமிருந்து விசாலமான ஒரு பகுதி நிலத்தை, விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்பி அவர்களுக்கு அந்தச் செய்தியை அறிவிக்கிறார். அப்பொழுது, சிவப்பு இந்தியர்களின் தலைவனாயிருந்த, ‘சியாடில்’ என்பவன், ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் மொழிபெயர்ப்பு இது. தன்னுடைய கடிதத்தில் 'சியாடில்' வெள்ளையர்களான அமெரிக்கரின் அறிவற்ற, நாகரிகம் என்ற பெயரில், இயற்கைச் சூழ்நிலையைக் கெடுத்து விடாமல் காப்பாற்றித் தீர வேண்டிய அவசியத்தை, வெகுநுட்பமாக விளக்கி, நிரூபிக்கிறான். வில்லும், அம்பும் கையில் பிடித்து, தலையை வண்ணப் பறவைகளின் இறகுகளைக் கொண்டு தம்மை அழகுபடுத்திக் கொள்ளும், “அநாகரிகன்” ஒருவன் அமெரிக்காவின் “நாகரிக” ஜனாதிபதிக்கு புவியின் இயற்கை நிலையைக் குறித்து, எழுதிய சொற்கள் இன்றைய நமது பாரத தேசத்திற்கும் மிகப்பொருந்துவதாகவே உள்ளது.

“ஆகாயத்தையும், பூமியின் வனப்பு மிக்க இயற்கைத் தோற்றத்தையும் உங்களால் இவற்றை எப்படி விலைக்கு வாங்க முடியும்? விற்க முடியும்? இந்தக் கற்பனையே எங்களுக்குப் படு விசித்திரமாக உள்ளது. நறுமணம் கமழும், மென்மைக் காற்றின் புதுத்தன்மையும், பாடிக் கொண்டோடும் புனித நதிகளின் செவிக்கினிய ஒலியும், நம்முடைய ஆளுமையில் இல்லாதிருக்கும் போது நீங்கள் அவற்றை வாங்கத்தான் முடியுமா? விற்கத்தான் முடியுமா? எங்களுடைய இந்தப் பூமியின் ஒவ்வொரு சிறு அம்சமும் எங்களுக்குப் புனிதமானது.

உள்ளங் கவரும் பசிய மரங்களின் ஒளி மிகுந்த இளந்தளிர்களும், மணலோடு சேர்ந்த கடற்கரையும், அடர்ந்த காடுகளில் படிந்துள்ள பனித்துளிகளும், ரீங்காரமிடுகின்ற வண்டுகளும், தும்பிகளும் - இவைகளெல்லாம் எங்கள் மக்களது நினைவுகளில் படிந்துள்ள மறக்க முடியாத அனுபவங்கள்.

வெள்ளை மனிதர்கள் காலஞ்சென்ற பின், "சுவர்க்கமடைந்து அங்குள்ள கணங்களிடையே உலாவுங்கால், அவர்கள் பிறந்து வாழ்ந்திருந்த புனிதமான நமது தாய் போன்ற இந்தப் புவியை அறவே மறந்து விடுகிறார்கள். ஆனால் சிவப்பு மனிதர்களாகிய எங்களுக்கு இந்த நிலமகளே அன்னையாக இருப்பதினால் மாண்டு, மறைந்தபோதுங்கூட இந்த அழகிய பூமியை மறந்து விடுவதில்லை. நாங்கள் இந்த மண்ணின் மக்கள். மண் எங்களுடையது. மணங்கமழும் மலர்கள் எங்கள் உடன் பிறப்புகள்.

கண்ணைக்கவரும் புள்ளி மான்கள், காட்டுக் குதிரைகள், கழுகு, கௌதாரிகள் - இவைகள் எங்களுடைய சகோதரர்கள். "மலைச் சிகரங்கள், பசுமையான கண்ணைக் கவரும் புல்வெளிகள், அதில் வயிறு நிறைய மேய்ந்து கன்றுகளை நினைத்துக் கூவிக் கொண்டு வரும் எங்கள் வளர்ப்புப் பிராணிகள், மற்ற மனிதர்கள் நாங்கள் எல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பள்ளம், படுகைகளில், ஆறு குளங்களில் பளபளக்கும் தண்ணீர் கேவலம் அது தண்ணீரல்ல, அது எங்கள் முன்னோர்களின் இரத்தம்.

நாங்கள், உங்களுக்கு விற்கவுள்ள நிலம் மிகப் புனிதமானது என்று நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பூக்கள் மலர்ந்துள்ள பொய்கைகளின், புனித நீரில் பிரதிபலிக்கின்ற ஒவ்வொரு பொருளும், எங்கள் மக்கள் வாழ்வின் செயல்பாடுகள்,

நினைவுகளை சதா சொல்லிக் கொண்டுள்ளதென்று நீங்கள் உங்கள் மக்களுக்கு அறிவித்து விட வேண்டும். ஆம், அந்தத் தண்ணீரின் சிறு அலைகளில் எங்களுடைய தந்தைக்குத் தந்தையின் கம்பீரமான குரல் அடங்கியுள்ளது என்பதையும், நீங்கள் தயவு செய்து மறந்து விடக் கூடாது. எங்கள், நீர் வேட்கையைத் தணித்து மகிழ்விக்கும் புனித நதிகள், எங்கள் உற்றார் உறவினர்கள் போல, எங்கள் குழந்தைகளுக்கும் பசி தணிய உணவளிக்கிறது. எங்களுடைய ஓடங்களை இயங்க வைக்கிறது.

நதிகள், எங்கள் உறவினர்கள் மட்டுமல்ல சற்று சிந்தித்துப் பார்த்தால், உங்களுடைய உறவினர்களுங்கூட. இவற்றையெல்லாம் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் உங்கள் மக்களுக்கும், உள்ளத்தில் பதியச் சொல்லி வைக்க வேண்டும். நீங்கள் உங்கள் உடன் பிறந்தவர்களிடம் அன்பு காட்டுவதைப் போல, இந்த ஆறு குளங்களின் மீதும் அன்பு காட்ட வேண்டும்.

வெள்ளையர்கள் எங்கள் வாழ்வின் நெறிமுறைகளைச் சரிவரப் புரிந்து கொள்வதில்லை. இரவோடு இரவாக வந்து தனக்கு வேண்டியவற்றை பூமியிலிருந்து, வலிந்து எடுத்துக்கொள்ளும், ஒவ்வொரு வெள்ளையனும், பாரதீனன். இந்தப் புனிதத் தரணி அவனுக்குச் சத்துரு, சகோதரனல்ல. புது மண்ணை அடைய ஆசைப்பட்டு வெள்ளை மனிதன் தன்னுடைய பழைய மண்ணை மறந்துவிட்டு முன்னுக்குச் செல்லுகிறான். அவன் தன்னுடைய மூதாதையரின் சமாதிகளை அங்கு விட்டு விட்டுப் புதிய இடத்தில் குடியேறுகிறான். அவை பாழாகி விடுகின்றன. தன்னுடைய மக்களோடு சேர்ந்து பிறருடைய மண்ணை ஆக்கிரமிக்கிறான் அவன்.


www.worldtamilacademy.com

தன்னை ஈன்ற தாய் உடன் பிறப்பு, உலகம், வானம் இவைகளையெல்லாம் அடைய முடியும். அசிங்கம் செய்ய முடியும். ஆடு, மாடுகளை விற்பதைப் போல இவைகளையும் விற்கமுடியும் என்பது போல நெறிமுறையின்றி வாழ்கிறான். அவனுடைய இந்தப் பசி, வண்ண வண்ணச் செடி கொடிகளின் பேரழகை நாசப்படுத்தி, பொட்டல் காடுகளாக மாற்றி விடுகிறது.

எங்களுடைய நெறிமுறைகள் உங்களுடையதைவிட முற்றிலும் வேறானவை. உங்களுடைய நகரங்களைப் பார்க்கும் போது, எங்களுடைய கண்களுக்கு நோயை உண்டு பண்ணுகின்றன. பாரம்பரியமாய் நாங்கள் அநாகரிகர்களாக இருப்பதினால், உங்களுடைய நடத்தையைப் புரிந்து கொள்ளக் கூடாதவராக உள்ளோம். வெள்ளை மனிதரின் நகரங்களில், மனோ ரம்மியமான பொது இடங்களே இல்லை. வசந்த காலத்தில் இளந்தளிர்கள் தழைப்பதைப் பார்ப்பதற்கோ, வண்ண, வண்ணப்பட்டுப் பூச்சிகளின் மெல்லிய இறக்கைகளின் ஒலியைக் கேட்பதற்கோ அங்கு இடமே கிடையாது. நான், அநாகரிகன் ஆனதன் காரணமாக இவைகளெல்லாம் எனக்கு அர்த்தமாகாமல் கூட இருக்கலாம். நிசப்தமான, இரவு நேரங்களில் கூகைக் கோழியின் கூச்சலைக் கேட்காத குளக்கரையிலுள்ள தவளைகளின் இரவு நேரக் கீர்த்தனைகளைக் கேட்காத வெள்ளை மனிதர்களின் வாழ்வு, வறட்சியான வாழ்வே யல்லவா? நானொரு சிவப்பு இந்தியன். அதனால், வெள்ளையர்களைப் பற்றி எனக்கு அதிகமாக வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

விலங்குகள், பறவைகள், தாவரங்கள், மனிதர்கள் இவர்களெல்லாம் சுவாசிப்பது ஒரே பிராணவாயுவை மட்டும். அதனால்,


www.worldtamilacademy.com

சிவப்பு மனிதனுக்கு மென்மையான காற்று மகத்தானதாகவுள்ளது. வெள்ளை மனிதன், தான் சுவாசிக்கும் பிராணவாயுவைப் பற்றியுங்கூட, எண்ணிப் பார்ப்பதில்லை. இறப்பதற்காகவே வந்திருக்கும் ஒரு மனிதனைப் போன்று அவன் தன்னைச் சுற்றியுள்ள, துர்நாற்றத்தையுங்கூட அறிந்து கொள்ளாத ஜடப் பொருளாயுள்ளான். எங்களுடைய பூமியை உங்களுக்கு விற்கப்பட்ட பின் காற்று, எங்களுக்கு எவ்வளவு மகத்தானதாயிருந்தது என்பதை நீங்கள் உள்ளத்தில் வைத்திருக்க வேண்டும். காற்று தன்னுடைய சக்தியை எல்லா ஜீவராசிகளோடும் பங்கிட்டுக் கொள்கிறது என்பதை நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். உங்கள் பாட்டனுக்கு அவனுடைய முதல் மூச்சாக மூக்கின்வழி சுவாசித்தது பிராணவாயுவே. அவன் கடைசி வேளையில் வெளியே விட்ட மூச்சுங்கூட அதே பிராணவாயுதான். நீங்கள் காற்றின் புனிதத் தன்மையை அறிந்து காப்பாற்ற வேண்டும். அப்போது மட்டும் நீங்கள் இந்த நிலத்திலிருந்த செடி கொடிகளிலிருந்து வெளிப்படும் பரிமளத்தோடு கூடிய சுத்தமான காற்றை நுகர்ந்து, ஆனந்தப்படலாம்.

நான் ஒரு அநாகரிகன் ஆனதினால் வேறொன்றும் எனக்குத் தெரியாது. ஓடுகின்ற ரயில் வண்டியில் அமர்ந்துள்ள வெள்ளையன் தன் துப்பாக்கியிலிருந்து வெடித்த குண்டுகள் பட்டு ஜீவன் விட்டு இங்கு அழுகிக் கிடக்கும் நூற்றுக்கணக்கான காட்டெருமைகளை நான் நேரில் கண்டிருக்கிறேன். எங்களுடைய உணவுக்காக மட்டும், நாங்கள் கொல்லக்கூடிய எருமைகளைவிட புகையை விட்டுக் கொண்டு ஓடும் இவர்களது இரும்பு வண்டி மேலானது எவ்வாறு என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில், நானொரு அநாகரிகன்.

விலங்குகளில்லாத மனித வாழ்வு பாழானது.

எல்லா ஜீவராசிகளும் இவர்களால் சுடப்பட்டு, அறவேயில்லாத போது, மனித குலமே ஒளியற்ற தனி வாழ்வில் நாசமடைகிறது. ஏனெனில், பிராணிகளுக்கு இவர்கள் ஏற்படுத்திய தலைவிதி இவர்களுக்கும், எதிர்காலத்தில் விதிக்கப் பட்டிருக்கும் எல்லா ஜீவராசிகளும் ஒன்றுக் கொன்று சம்பந்தப்பட்டேயுள்ளன.

நீங்கள் உங்கள் மக்களுக்கு அவர்கள் கால்களுக்குக் கீழாகயிருப்பது எங்களது மூதாதையர்களின் சாம்பல் என்பது பற்றிச் சொல்லித் தெரிவிக்க வேண்டும். இந்தப் பூமி எங்கள் குலத்தவரின் வாழ்வினால் நிறைவு பெற்றுள்ளது என்பதை உங்கள் மக்களுக்குப் போதிக்க வேண்டும். அவர்களுக்குப் பூமி மதிக்கப்பட வேண்டுமென்பதைக் கற்பித்திருக்க வேண்டும். இந்த மண் “எங்களுடைய அன்னை " என்று நாங்கள் எங்கள் மக்களுக்கு அறிவுறுத்தி உள்ளதைப் போல் நீங்களும் உங்கள் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். மண்ணுக்கு ஆவதுதான் மண்ணின் மேல் பிறந்த மக்களுக்கும் ஆகின்றது. மனிதர்கள் இந்த பூமியை உதாசீனம் செய்தால் அது தம்மைத்தாமே உதாசீனம் செய்து கொண்டது போலும்.

எங்களுக்குத் தெரிந்தது இவ்வளவு. இந்த பூமி மனிதனுக்குச் சேர்ந்ததல்ல. மனிதன், பூமியினால் தோன்றியவன். இதை நாங்கள் அறிந்துள்ளோம். ஒரே குடும்பத்திற்குச் சேர்ந்தவர்களில் இரத்த சம்பந்தம் இருப்பதைப் போன்றே பூமியின் மேலிருக்கும் எல்லா உயிர்ப் பிராணிகளினிடையிலும் சம்பந்தமுள்ளது. மனிதன் தன்னுடைய உயிர் வாழ்வை நியமனம் செய்து கொண்டவனல்ல. வாழ்வின் ஒரு சிறு அம்சம் மட்டும் தான் மனிதன். அவன் வாழ்க்கையில் எதைஎதைச் செய்கிறானோ அதைத் தனக்காகவே செய்து கொள்கிறான்.



தெய்வத்தோடு பேசுவேன், அவரோடு நட்புறவு பூண்டுள்ளேன் என்று பேசிக் கொண்டிருக்கிற வெள்ளை மனிதன் கூட மற்ற எங்களைப் போன்ற எல்லா மனிதர்களோடும் ஒன்றிப் புரிந்து கொண்டு வாழவேண்டும். அவனுக்குத் தனிப்பட்ட மேலாண்மை எதுவும் கிடையாது.



www.worldtamilacademy.com

எல்லா மனிதர்களும், சகோதரர்கள் என்பது எங்களுக்கும் புரிந்துள்ளது. நம்முடைய தெய்வம், எல்லாருடைய தெய்வமுமாகும். இந்த உண்மையை வெள்ளை மனிதன் எப்போதாவது ஒரு நாள் புரிந்து கொண்டே தீர வேண்டும்.

இறைவன் உங்களுடையவன் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால், அது அப்படியில்லை. இறைவன் எல்லாருக்குமுரியவன், பொதுவானவன். அவன் எங்களுக்கும் வெள்ளையனுக்கும் சரிசமமான கருணையைத் தான் காட்டுகிறான். இந்த பூமி அவனுக்கு மகத்தானது. மண்ணுக்குப் பாதகம் செய்தால் நம்மை உண்டாக்கிய அந்த எல்லாம் வல்ல இறைவனையே அவமானம் செய்ததைப் போல. மற்ற எல்லா மக்களின் காலமும் முடிவதற்கு முன்பேயே வெள்ளையனின் காலம் முடிந்து போகக் கூடும். நீங்கள் உறங்கும் உங்களது படுக்கையிலேயே அசூசி செய்தால், ஒரு நாள் அந்த அசூசியிலேயே உங்களுடைய உயிரை நீங்கள் விட வேண்டியிருக்கும்.

ஏதோ ஒரு உத்தேசத்துக்காக இறைவன் உங்களுக்கு இந்த நிலம், மேலும் இந்த நிலத்தின் வாழும் மனிதர்கள் மேலே ஆளுமையைக் கொடுத்துள்ளான். இந்த விதி விலாசம் எங்களுக்கு மர்மமாகத் தோன்றுகிறது. ஏனென்றால் நீங்கள் காட்டெருமைகளை வீணாக சுட்டுக் கொல்வதிலும், காட்டுக் குதிரைகளுக்குக் கடிவாளம் இடுவதையும், மணங்கமழுகின்ற அழகிய காடுகளினிடையே ஒருவரோடொருவர் உரையாடுவதற்கான கம்பிகளை இழுத்து, காடுகளின் இயல்புக்குக் குறைவு ஏற்படுத்தியதை நாங்கள் புரிந்து கொள்ளவே இயலாது. நீங்கள் இங்கு வந்து குடியேறியதன் காரணமாக முந்தி இருந்ததைப் போன்ற அடர்ந்த மரங்கள் நிறைந்த வனங்களில்லை.


www.worldtamilacademy.com

தேன் கூடுகளில்லை. வைகறைப் போதில் அரும்பி மலர்ந்த மலர் வனங்களில்லை. பசுமையான புதர்களில்லை. பறவைகளெல்லாம் எங்கேயுள்ளன? விலங்குகளெல்லாம் எங்கே உள்ளன? துள்ளிக் குதித்து விளையாடி எங்கள் உள்ளங்களையும், கண்களையும் ஒருங்குகவர்ந்து கொண்டிருந்த அந்தக் கலைமான்களின் கூட்டம் எங்குப் போய் ஒழிந்தன? ஆம்! இனிச் செவ்விந்தியர்களாகிய நாங்களும் சரி, எங்களோடு சேர்ந்து ஒன்றி வாழ்ந்த விலங்குகளும், பறவைகளும், தாவரங்களும் நிலைத்து, இந்த மண்ணின் மேல் வாழ்வதற்காக இனி வெள்ளையரோடு போராட வேண்டிய காலம் வர ஆரம்பமாகி விட்டது"



www.worldtamilacademy.com



காந்தியை -

மகாத்மாவாக மாற்றிய

அரிச்சந்திரன் கதை.

சிவாஜியை -

மாபெரும் மராட்டிய வீரராக மாற்றிய

ஜீஜாபாயின் கதை.

உங்களை -

கருணையும் தியாகமும் கொண்டு


வாழச் செய்யும்

கவிஞர் வெள்ளியங்காட்டானின்

நெஞ்சை உருக்கும் நீதிக்கதைகள்

படித்துப் பயன்பெற வாழ்த்துக்கள்.

- பிரபஞ்ச அமைதி ஆசிரமம்



# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com